# தினபூமி

thinaboomi.com

பூமி: 31 சுற்று: 266 ஆவணி 31

RNI Regn. No.61494/94 MA / 36 / 2015-2017

மதுரை, செவ்வாய், செப்டம்பர் 16, 2025

▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி

பக்கம் 08 ₹ 3.00




**நேபாளத்தில் இடைக்கால பிரதமர் சுசீலா கார்கி அமைச்சரவையில் மேலும் 3 பேர் புதிதாக பதவியேற்பு**

....2-ம் பக்கம்

**பீகாரில் தொகுதி பங்கீட்டில் இழுபறி: 243 தொகுதிகளிலும் போட்டியிட தேஜஸ்வி யாதவ் அதிரடி முடிவு**

...3-ம் பக்கம்

**ஆசிய கோப்பை கிரிக்கெட்: புள்ளி பட்டியல் 'ஏ' பிரிவில் முதலிடத்தில் இந்திய அணி**

....6-ம் பக்கம்






● சென்னை கலைவாணர் அரங்கத்தில் நேற்று சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் பெற்றோர்கள் இருவரையும் இழந்த மற்றும் பெற்றோரில் ஒருவரை இழந்து மற்றொரு பெற்றோரால் பராமரிக்க இயலாத குழந்தைகளை அரவணைத்து தொடர்ந்து பாதுகாத்திடும் வகையில் அக்குழந்தைகளின் 18 வயது வரையிலான பள்ளிப்படிப்பு முடியும் வரை இடைநிற்றல் இன்றி கல்வியை தொடர மாதம் ரூ.2,000 உதவித்தொகை வழங்கிடும் "அன்புக்கரங்கள்" திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி, அமைச்சர்கள் கே.என்.நேரு, மா.சுப்பிரமணியன், கீதா ஜீவன், சேகர் பாபு, தமிழக அரசின் தலைமை செயலாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### மத்திய அரசு கொண்டு வந்த

# வக்பு திருத்த சட்டத்திற்கு தடை விதிக்க சுப்ரீம் கோர்ட் மறுப்பு

## சில விதிகளுக்கு விதிக்கப்பட்ட இடைக்கால தடைக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வரவேற்பு

புதுடெல்லி, செப். 16-

**மத்திய அரசு கொண்டு வந்த வக்ஃப் சட்டத் திருத்தத்திற்கு முழுவதுமாக தடை எந்த முகாந்திரமும் இல்லை என்று தெரிவித்துள்ள சுப்ரீம் கோர்ட், வக்ஃப் சட்டத் திருத்த சட்டத்திற்கு தடை விதிக்க மறுப்பு தெரிவித்துள்ளது. தனிப்பட்ட குடிமக்கள் உரிமை பற்றி முடிவெடுக்க கலெக்டரை அனுமதிக்க முடியாது என தெரிவித்துள்ள சுப்ரீம் கோர்ட் ஆட்சியர் அதிகாரம் உள்ளிட்ட சில விதிகளுக்கு மட்டும் இடைக்கால தடை விதித்துள்ளது. சில விதிகளுக்கு சுப்ரீம் கோர்ட் விதித்துள்ள இடைக்கால தடைக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வரவேற்பு தெரிவித்துள்ளார்.**

நாட்டில் முஸ்லிம்கள் தானமாகவும், நன்கொடையாகவும் அளிக்கும் நிலங்கள் மற்றும் சொத்துகளை வக்ஃப் வாரியம் நிர்வகித்து வருகிறது. இந்நிலையில், வக்ஃப் சொத்துகளின் நிர்வாகத்தைச் சீரமைக்கும் நோக்கில், 1995-ஆம் ஆண்டின் வக்ஃப் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளும் வகையில் மத்திய அரசு வக்ஃப் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது. மத்திய அரசு கொண்டு வந்த இந்த வக்ஃப் சட்டத் திருத்தத்திற்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்குகள் நேற்று தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் அமர்வு முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், "வக்ஃப் சட்டத் திருத்தத்திற்கு முழுவதுமாக தடை விதிக்க எந்த முகாந்திரமும் இல்லை.

எனினும் வக்ஃப் ஒன்றை உருவாக்க ஒருவர் 5 ஆண்டுகள் இஸ்லாமிய மதத்தைப் பின்பற்ற வேண்டும் என்ற விதிக்கு இடைக்காலத் தடை விதிக்கப்படுகிறது. ஒருவர் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுபவரா என்பதைத் தீர்மானிப்பதற்கான விதிகள் வகுக்கப்படும் வரை இந்த விதி நிறுத்தி வைக்கப்படுகிறது. அதேபோல வக்ஃப் வாரியத்தில் அதிகபட்சமாக முஸ்லிம் அல்லாதவர்கள் 4 பேர் வரை இருக்கலாம். மாநிலத்திற்கு இது 3 ஆக நிர்ணயிக்கப்படுகிறது.

**சில விதிகளுக்கு மட்டும் தடை**

1) வக்புக்கு சொத்தை அளிக்க, 5 ஆண்டு இஸ்லாத்தை கட்டாயமாக நடைமுறையில் கடைப்பிடித்திருக்க வேண்டும் எனும் விதிக்குத் தடை.
2) வக்பு நிலத்தை அரசு நிலம் என்று ஒரு குற்றச்சாட்டு எழுந்தாலே, உரிய அதிகாரி அறிக்கை அளிக்கும்வரை அல்லது அரசு முடிவெடுக்கும் வரை அச்சொத்தைப் பறிக்கும் அதிகாரத்துக்குத் தடை.
3) ‘வக்பு பயனர்’ என்பதை நீக்கும் மாவட்ட கலெக்டருக்கான அதிகாரத்துக்குத் தடை.
4) மத்திய வக்பு வாரியத்தில் நான்குக்கும் மேற்பட்ட முஸ்லீம் அல்லாதோரை சேர்ப்பது, மாநில வக்பு வாரியங்களில் மூன்றுக்கும் மேற்பட்ட முஸ்லீம் அல்லாதோரை சேர்ப்பதற்கு தடை.

**அதிகாரங்களுக்கு தடை...**

5 ஆண்டுகள் உறுப்பினராக இருந்தால் மட்டுமே நிலம் நன்கொடையை அளிக்கலாம் என்ற உத்தரவும் நிறுத்திவைக்கப்படுகிறது. மேலும் வக்ஃப் விவகாரத்தில் மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்கப்பட்ட சில அதிகாரங்களுக்கு தடை விதிக்கப்படுகிறது. வக்ஃப் என அறிவிக்கப்பட்ட சொத்து, அரசாங்கச் சொத்தா என்பதைத் தீர்மானித்து உத்தரவுகளைப் பிறப்பிக்கும் ஆட்சியரின் அதிகாரம் நிறுத்திவைக்கப்படுகிறது. தனிப்பட்ட உரிமைகள் பற்றி முடிவெடுக்க ஆட்சியரை அனுமதிக்க முடியாது. இது அதிகாரத்தை மீறும் செயல். தீர்ப்பாயத்தால் தீர்ப்பு வழங்கும் வரை 3 ஆம் நபருக்கு உரிமை அளிக்க முடியாது. அதேபோல வக்ஃப் வாரியத்தின் தலைமை நிர்வாக அதிகாரி முடிந்தவரை ஒரு முஸ்லிமாக இருக்க வேண்டும் என்று கருதுகிறோம் என்று கூறியுள்ளது.

**முதல்வர் வரவேற்பு...**

இதற்கிடையே சுப்ரீம் கோர்ட்டின் உத்தரவுக்கு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் வரவேற்பு தெரிவித்துள்ளார். இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் எக்ஸ்

(கடைசி பக்கம் பார்க்க)

### தமிழகத்தில் சேலம், வேலூர் உள்ளிட்ட

# 6 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு

சென்னை, செப். 16-

**தமிழகத்தில் சேலம், வேலூர் உள்ளிட்ட 6 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக வடதமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், தென்தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இந்த நிலையில், தமிழகத்தில் இன்று (செப்.16) ஈரோடு, கிருஷ்ணகிரி, தருமபுரி, திருப்பத்தூர், சேலம், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களிலும், நாளை செப்.17-ம் தேதி கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், திருச்சி, தேனி, திண்டுக்கல், ஈரோடு, நீலகிரி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

### பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு

# மாதம் 2,000 ரூபாய் உதவித்தொகை வழங்கும் 'அன்புக்கரங்கள்' திட்டம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார்

சென்னை, செப். 16-

**பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு ரூ. 2000 உதவித்தொகை வழங்கிடும் அன்புக் கரங்கள் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடக்கி வைத்தார்.**

தமிழக அரசின் ‘தாயுமானவர்’ திட்டத்தின் ஒரு பகுதியாக, பெற்றோர் இருவரையும் இழந்த மற்றும் பெற்றோரில் ஒருவரை இழந்து மற்றொரு பெற்றோரால் பராமரிக்க இயலாத குழந்தைகளை அரவணைத்து தொடர்ந்து பாதுகாக்கும் வகையில், ‘அன்புக்கரங்கள்’ திட்டம் தொடங்கப்படும் என்று தமிழக அரசால் அறிவிக்கப்பட்டது. இந்தத் திடத்தின் கீழ், அந்தக் குழந்தைகளின் 18 வயது வரையிலான பள்ளிப் படிப்பு முடியும் வரை இடைநிற்றல் இன்றி கல்வியைத் தொடர, மாதம் ரூ. 2,000 உதவித் தொகை வழங்கப்படும்.

மேலும், பள்ளிப் படிப்பு முடித்த பின்னர் கல்லூரிக் கல்வி மற்றும் உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்க வழிவகை செய்யும். இந்த நிலையில், இந்தத் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை, கலைவாணர் அரங்கத்தில் தொடக்கி வைத்து, குழந்தைகளுக்கு உதவித் தொகையை வழங்கினார். மேலும், பெற்றோர் இருவரையும் இழந்து பிளஸ் 2 வகுப்பு முடித்து, பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களில் தமிழக அரசின் முயற்சியால் சேர்க்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு மடிக்கணினிகளையும் வழங்கினார்.

திட்டத்தை தொடங்கி வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது., இன்றைக்கு, (நேற்று) தாயுமானவர் திட்டத்தின் ஒரு பகுதியாக, இந்த அன்புக்கரங்கள் திட்டத்தைத் தொடங்கி வைத்திருக்கிறோம். இதனால், 6,082 குழந்தைகளுக்கு, மாதந்தோறும் இரண்டாயிரம் ரூபாய் வழங்கப் போகிறோம். இது என்ன, வாக்கரசியலுக்காக செய்வதா? காலையில் பள்ளிக்கு பசியுடன் வர குழந்தையின் வேதனையைப் பார்த்தேன். காலை உணவுத் திட்டத்தை உருவாக்கினேன். இன்றைக்கு, 21 இலட்சம் குழந்தைகளுக்கு நாள்தோறும் சூடாக, சுவையாக சத்தான உணவை பரிமாறுகிறோம்.

இது என்ன, வாக்கரசியலுக்காக செய்வதா? சமூகத்தின் விளிம்பு நிலையில், எண்ணிக்கையில் சில நூறு - சில ஆயிரம் மட்டுமே இருக்கின்ற மாற்றுத்திறனாளிகள் - திருநர்கள் ஆகியோருக்கும் பார்த்துப் பார்த்துத் திட்டங்களை செயல்படுத்துகிறோம். இது என்ன, வாக்கரசியலுக்காக செய்வதா? இன்னும் சொல்கிறேன்... நம்முடைய

(கடைசி பக்கம் பார்க்க)

# பேரறிஞர் அண்ணா என்றால் தமிழ்நாடு, தமிழ், திராவிடம்

## எடப்பாடி பழனிசாமி புகழஞ்சலி

சென்னை, செப். 16-


**சந்தேக கேள்விகளுக்கு தன் செயலால், சாதனையால் பதில் சொன்ன தென்னாட்டுத் தென்றல் என்று அண்ணாவுக்கு புகழஞ்சலி செலுத்தியுள்ள எடப்பாடி பழனிசாமி, அண்ணா என்றால் தமிழ்நாடு, தமிழ், திராவிடம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளை முன்னிட்டு, அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ‘எக்ஸ்’ தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது;- தமிழ்நாடு, தமிழ், திராவிடம் என்றால் அண்ணா. அண்ணா என்றால் தமிழ்நாடு, தமிழ், திராவிடம். இந்தியாவில் ஒரு மாநிலக் கட்சி ஆட்சி அமைக்க முடியுமா? நாட்டுக்குள் ஒரு தமிழ்-நாடா? என்று சந்தேக கேள்விகள் கேட்ட காலத்தில் தன் செயலால், சாதனையால் பதில் சொன்ன தென்னாட்டுத் தென்றல், நம் அண்ணா.



அண்ணாவைப் பெயரில் மட்டும் அல்ல- கொள்கையில், செயலில், அரசியல் அறத்தில் 53 ஆண்டுகளாக பெருமையோடு அ.தி.மு.க. ஏந்தி நிற்கிறது. குடும்பப் பின்புலமற்ற நம்மைப் போன்ற சாமானியர்களை அரியணை ஏற்றும் திராவிட அரசியலின் ஈடு இணையற்ற தலைமகனான பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பிறந்தநாளான இன்று, குடும்ப ஆட்சியின் பிடியில் சிக்கியுள்ள தமிழகத்தை மீட்டு, சாமானிய மக்களுக்கான ‘அண்ணாயிசம்’ போற்றும் ஆட்சியை அ.இ.அ.தி.மு.க. தலைமையில் நிறுவிட உறுதியேற்போம். மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம். அண்ணா நாமம் வாழ்க. இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| -118.96 | -44.80 |
| பாயிண்ட் 81,785.74 | பாயிண்ட் 25,069.20 |




**தங்கம்**
1 சவரன் ₹81,680
1 கிராம் ₹10,210



**வெள்ளி**
1 கிலோ ₹143,000
1 கிராம் ₹143.00

**டாலர்** ₹88.19

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



## நேபாள பிரதமர் சுசீலா கார்கியின்
# அமைச்சரவையில் 3 பேர் பதவியேற்பு

**காத்மாண்டு, செப். 16-**

நேபாள பிரதமர் சுசீலா கார்கியின் புதிய அமைச்சரவையில் 3 பேர் அமைச்சர்களாக நேற்று பதவியேற்றனர்.



நேபாள பிரதமர் சுசீலா கார்க்கி, எரிசக்தி, நீர்வளம் மற்றும் நீர்ப்பாசனத் துறை அமைச்சராக குல்மான் கிசிங்கையும், உள்துறை மற்றும் சட்ட அமைச்சராக ஓம் பிரகாஷ் ஆர்யலையும், நிதி அமைச்சராக ரமேஷோர் கானலையும் நியமித்து தனது அமைச்சரவையை விரிவுபடுத்தியுள்ளார். இந்த மூன்று அமைச்சர்களும் நேற்று பதவியேற்றனர்.

புதிய அமைச்சராக பொறுப்பேற்ற குல்மான் கிசிங் முன்பு நேபாள மின்சார ஆணையத்தின் நிர்வாக இயக்குநராக இருந்தார், மேலும் மின்சார ஆணையத்திற்கு பெரும் வருவாய் ஈட்டி தந்ததுடன், நீண்டகால மின்வெட்டுகளையும் முடிவுக்குக் கொண்டுவந்த பெருமைக்குரியவர்.

முக்கியத்துவம் வாய்ந்த உள்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள ஓம் பிரகாஷ் ஆர்யல், காத்மாண்டு மேயர் பாலன் ஷாவின் சட்ட ஆலோசகராக பணியாற்றினார். நிதித்துறைக்கு பொறுப்பேற்றுள்ள ரமேஷோர் கானல், ஒரு அனுபவமிக்க நிதி அதிகாரி ஆவார், இவர் நிதி செயலாளராகவும் பணியாற்றியவர்.

## ரஷ்யா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை மீது உக்ரைன் தாக்குதல்

**மாஸ்கோ, செப். 16-**

ரஷ்யாவில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை மீது உக்ரைன் டிரோன் தாக்குதல் நடத்தியுள்ளது.

ரஷ்யா, உக்ரைன் இடையே போர் தொடங்கி மூன்றரை ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வருகிறது. உலக தலைவர்கள் பலர் இந்த போர் தாக்குதலை நிறுத்த நடவடிக்கை மேற்கொண்டாலும் தொடர்ந்து வருகிறது. போரில் லட்சக்கணக்கானவர்கள் பலியாகி வருகிறார்கள்.

இந்தநிலையில் ரஷ்யாவின் லெனின்கிராட் பகுதியில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை மீது உக்ரைன் தாக்குதல் நடத்தியது. ஆண்டுக்கு 1.7 கோடி டன் அளவில் எண்ணெய் தயாரிப்பில் ஈடுபடும் இந்த ஆலையை குறிவைத்து டிரோன்களை ஏவியும், ஆளில்லா விமானங்களை அனுப்பியும் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. இதனை ரஷ்ய வான்பாதுகாப்பு தளவாடங்கள் வானிலேயே இடைமறித்து தகர்த்ததால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற அன்புக்கரங்கள் திட்ட தொடக்க விழாவில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளை பார்வையிட்டார். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## அமெரிக்காவுக்கு வடகொரியா எச்சரிக்கை

**பியாங்காங், செப். 16-**

அமெரிக்காவுக்கு வடகொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடகொரியாவுக்கு எதிராக அமெரிக்காவுடன் இணைந்து தென்கொரியா மற்றும் ஜப்பான் நாடுகளின் கடற்படையினர் கூட்டு போர் பயிற்சியில் ஈடுபட உள்ளனர். இன்று முதல் 15 நாட்களுக்கு நடக்க உள்ள இந்த தீவிர போர் பயிற்சியில் முத்தரப்பு நாடுகளை சேர்ந்த வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பு ராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரிய தீபகற்ப கடலில் நடைபெறவுள்ள இந்த ராணுவ பயிற்சிக்கு எதிராக வடகொரியா தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது. வடகொரியா தலைவர் கிம் ஜாங் அன்னின் சகோதரியும் அந்த நாட்டின் மூத்த அரசியல்வாதியும் ஆன கிம் யோ ஜாங், அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடுத்து பேசியுள்ளார். அப்போது அவர், "இந்த ராணுவ பயிற்சி பொறுப்பற்ற அதிகாரங்களில் கூட்டணியால் நடத்தப்படுகிறது. இது எதிர்மறையான விளைவுகளுக்கு வழிவகுக்கும்" என்றார்.

## இந்தியாவுடனான உறவை முறிக்க முடியாது:
# அமெரிக்காவுக்கு ரஷ்யா பதில்

**மாஸ்கோ, செப். 16-**

எண்ணை வாங்கும் விவகாரம் தொடர்பாக இந்தியாவுடனான உறவை முறிக்க முடியாது என்று அமெரிக்காவுக்கு ரஷ்யா கூறியுள்ளது.

ரஷ்யாவில் இருந்து கச்சா எண்ணை வாங்கி வருவதால் இந்திய பொருட்களுக்கு அமெரிக்கா அதிபர் 50 சதவீத வரி விதித்தார். அமெரிக்காவின் மிரட்டலை கண்டு கொள்ளாத இந்தியா தொடர்ந்து ரஷ்யாவிடம் இருந்து எண்ணை வாங்கி வருகிறது. இந்த இந்தியா - ரஷ்யா இடையே உறவில் விரிசலை ஏற்படுத்தும் வகையில் டிரம்ப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

ரஷ்யாவிடம் இருந்து எண்ணை வாங்குவதை நிறுத்துமாறு அமெரிக்கா மற்றும் நேட்டோவின் தொடர்ச்சியான அழுத்தங்களுக்கு எதிராக இந்தியா உறுதியான நிலைப் பாட்டை எடுத்துள்ளது. அச்சுறுத்தல்கள் இருந்த போதிலும் இந்தியா உறுதியாக இருக்கிறது.

ரஷ்யா-இந்தியா இடையேயான நீண்டகால நட்பு கலாசாரம் உள்பட பல்வேறு விஷயங்களில் வேரூன்றி உள்ளது. இரு நாடுகளுக்கும் இடையேயான உறவை முறிக்க முடியாது. இதற்கான எந்தவொரு முயற்சியும் தோல்வி அடையும். இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகள் முன்னேற்றம் கண்டு வருகிறது. இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

## தங்கம் விலை சற்று சரிவு

**சென்னை, செப். 16-**


நிகழாண்டு தொடக்கம் முதலே தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்த வண்ணமே உள்ளது. கடந்த 8 மாதங்களில் மட்டும் தங்கம் விலை சவரன் சுமார் ரூ.20,000-க்கும் மேல் உயர்ந்தது. சென்னையில் இந்த மாதம் தொடக்கம் முதலே தங்கம் விலை உயர்ந்து வந்த நிலையில், கடந்த 9-இல் தங்கம் விலை சவரனுக்கு ரூ.720 உயர்ந்து ரூ.81,200-க்கும், 10, 11 ஆகிய தேதிகளில் விலையில் மாற்றமின்றியும் விற்பனையானது.

தொடர்ந்து வெள்ளிக்கிழமை தங்கம் விலை சவரனுக்கு ரூ. 720 உயர்ந்து ரூ.81,920-க்கு விற்பனையான நிலையில், சனிக்கிழமை சற்றுக் குறைந்து, ரூ.81,760-க்கு விற்பனையானது. இந்த நிலையில், சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று கிராமுக்கு ரூ. 10 குறைந்து ரூ. 10,210-க்கும் சவரனுக்கு ரூ. 80 குறைந்து ரூ. 81,680-க்கும் விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையில் மாற்றம் இல்லாமல் கிராம் ரூ.143-க்கும், ஒரு கிலோ ரூ.1.43 லட்சத்துக்கும் விற்பனையானது.

## ஒரே இரவில் கொட்டித்தீர்த்த 245 மி.மீ. மழை:
# ஐதராபாத்தில் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட 3 பேர்

**தெலங்கானா, செப். 16-**

தெலங்கானா மாநிலம் ஐதராபாத்தில் பெய்த தொடர் கனமழை காரணமாக அந்த நகரம் முழுவதும் வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது.



ஐதராபாத்தில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணி முதல் நேற்று காலை 8 மணி வரை மழை கொட்டித் தீர்த்தது. சித்திபேட்டையில் உள்ள நாராயண்ராவ் பேட்டை பகுதியில் அதிகபட்சமாக 245.5 மில்லிமீட்டர் மழை பெய்துள்ளது. ரங்காரெட்டி மாவட்டத்தில் உள்ள தட்டியன்னாரம் பகுதியில் 128 மிமீ, முஷீராபாத் பகுதியில் 114.5 மிமீ மழையும் பெய்துள்ளது.

தெலங்கானாவில் இந்த கனமழையால் அங்குள்ள சாலைகள் முழுவதும் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன. போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஐதராபாத் மாநகராட்சியும் போக்குவரத்து காவல்துறையினரும் இதனை சரிசெய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். வெள்ள நீரை அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. வெள்ளம் அதிகமுள்ள பகுதிகளில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பர்சிகுட்டாவில் வடிகால் சுவர் இடிந்து விழுந்ததில், 2 குழந்தைகளுக்குத் தந்தையான சன்னி என்பவர் அடித்துச் செல்லப்பட்டார். அவரைத் தேடும் பணி நடைபெற்று வருகிறது. அதேபோல நம்பள்ளி பகுதியில் அர்ஜுன்(26), ராமா(28) ஆகிய இருவரும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

ஐதராபாத்தில் பேரிடர் மீட்புப் படையினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். மேலும் அங்குள்ள பல கடைகளில் வெள்ளம் புகுந்து பொருள்கள் சேதமாகியுள்ளன. மிகவும் மோசமான வடிகால் அமைப்பு முறையே இவ்வளவு பாதிப்புகளுக்கு காரணம் என்று மக்கள் குற்றம்சாட்டுகின்றனர். முன்னதாக தெலங்கானாவுக்கு இந்திய வானிலை ஆய்வு மையம் அதி கனமழைக்கான சிவப்பு எச்சரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# நடிகர் ஓவன் கூப்பருக்கு எம்மி விருது

**அமெரிக்கா, செப். 16-**

நடிகர் ஓவன் கூப்பருக்கு எம்மி விருது வழங்கப்பட்டது.




நெட்பிளிக்ஸ் தளத்தில் இந்தாண்டு வெளியாகி மிகப்பெரிய வரவேற்பைப் பெற்ற தொடர் அடோலசென்ஸ். குழந்தை வளர்ப்பு மற்றும் இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சிகள் குழந்தைகளை எப்படியெல்லாம் பாதிக்கிறது என்பதை 4 எபிசோடுகளில் பேசிய இத்தொடருக்கு உலகம் முழுவதும் பாராட்டுகள் கிடைத்தன. ஆச்சரியப்படுத்தும் வகையில், ஒட்டுமொத்த தொடரும் சிங்கிள் ஷாட்டில் எடுக்கப்பட்டதால் அசாத்திய உருவாக்கம் என்கிற புகழையும் பெற்றது.

தொடரின் மையக் கதாபாத்திரமாக நடித்த நடிகர் ஓவன் கூப்பர் தன் முதிர்ச்சியான நடிப்பால் ஒவ்வொரு காட்சியிலும் அசத்தியிருப்பார். முக்கியமாக, உளவியல் நிபுணருடன் பேசும் காட்சியில் தொடர் வசனங்களைப் பேசிவிட்டு மேஜையில் ஓங்கித்தட்டும் காட்சி புல்லரிப்பைக் கொடுத்தது.

இந்த நிலையில், இந்தாண்டு எம்மி விருதுகள் நிகழ்வில் அடொலசென்ஸ் தொடருக்காக சிறந்த துணை நடிகருக்கான விருது 15 வயதான ஓபன் கூப்பருக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த விருதின் மூலம், மிக இளவயதிலேயே எம்மி விருதை வென்ற ஆண் என்கிற சாதனையையும் படைத்துள்ளார். நிகழ்வில் பேசிய ஓவன், "நாம் நினைத்தால் எதையும் சாதிக்கலாம். கடந்த 3 ஆண்டுகளுக்கு முன் நான் ஒன்றுமில்லாமல் இருந்தேன். இப்போது, எம்மி கிடைத்திருக்கிறது. என்னால் நம்ப முடியவில்லை. என் பெற்றோருக்கும் அடோலசென்ஸ் குழுவினருக்கும் நன்றி" எனத் தெரிவித்துள்ளார். இந்த விருதுக்காக ஓபனின் ரசிகர்கள் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

**16-09-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** தன வரவு கூடும். நோய் நீங்கி ஆரோக்கியம் பெருகும். எல்லா வகையிலும் நல்லதே நடக்கும். வியாபாரிகளுக்கு தொழில் விருத்தி ஏற்படும். பெயரும், புகழும் அதிகரிக்கும்.

**ரிஷபம்:-** இன்று, சுமாரான பணவரவு உள்ள நாள். மன சஞ்சலங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. சிலருக்கு வழக்குகளால் வெட்டி செலவுகள் ஏற்படலாம். எடுத்த காரியங்களில் தாமதங்கள் ஏற்படும்.

**மிதுனம்:-** மகிழ்ச்சி நிறைந்த நாளாக அமையும். விரும்பிய பொருட்கள் வீடு வந்து சேரும். ஆணையிடும் அதிகார பதவி கிடைக்கும். வீட்டில் வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும்.

**கடகம்:-** குடும்பத்தில் அற்ப ஆசைகள் மூலம் அதிக செலவுகள் ஏற்படும். பணியாளர்கள் தேவையற்ற காரியங்களில் ஈடுபட்டு வீண் பிரச்சனைகளுக்கு வழிவகுப்பர். என்னதான் உழைத்தாலும் ஆதாயம் பூஜ்யமாகும்.

**சிம்மம்:-** அரசு வேலை கிடைக்க வாய்ப்பு ஏற்படும். தொழிலில் அதிக முதலீடு செய்து ஆதாயம் பெறுவீர்கள். விளம்பரங்கள் மூலம் உங்கள் நிறுவனம் புகழ் பெறும். பதவி உயர்வுகள் எதிர்பார்க்கலாம்.

**கன்னி:-** புதிய சொத்துக்கள் சேரும். மாணவர்களுக்கு படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும். பெற்றோரின் ஆரோக்கியம் மேம்படும். வியாபாரிகள் வாடிக்கையாளரை கவர பரிசு திட்டங்களை அறிவிப்பது சிறப்பு.

**துலாம்:-** தர்ம காரிய ஈடுபாடு வாழ்க்கையில் புதிய திருப்பங்களை ஏற்படுத்தும். எடுத்த காரியம் அனைத்திலும் வெற்றி கிட்டும். பல வழிகளிலும் அதிக தனலாபம் கிடைக்கும். 9

**விருச்சிகம்:-** கோபத்தால் உறவுகளுக்குள் குழப்பமும், பிரிவும் ஏற்படலாம். உயர் அதிகாரிகளிடம் பணிவாக நடந்தால் அனுகூலமான ஆதாயங்கள் கிடைக்கும். வாகன சுகம் உண்டு.

**தனுசு:-** குடும்ப உறுப்பினர்கள் தேவை அறிந்து செயல்படுவீர்கள். சமூக விழிப்புணர்வுடன் செயல்படுவீர்கள். தொழில் வியாபாரத்தில் கடின உழைப்பால் பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**மகரம்:-** பலவழிகளிலும் பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். காதலில் வெற்றி கிடைக்கும். கனிவான பேச்சால் காரியங்களை சாதிப்பீர்கள். மனதுக்குப் பிடித்த நவீன புத்தாடைகள் வாங்குவீர்கள்.

**கும்பம்:-** நீண்ட தூரப் பயணங்கள் செல்லும் போது தடைகள் ஏற்படலாம். வாகனங்களை விதிகளின்படி செலுத்தாவிட்டால் விபத்துக்கு வழிவகுக்கும். குழந்தைகளுக்கு சிறு உடல் உபாதைகள் ஏற்படலாம்.

**மீனம்:-** உங்கள் பொருட்கள் அனைத்தையும் பத்திரப்படுத்திக் கொள்வது நல்லது. தாயின் உடல் நிலையில் மிகுந்த அக்கறை தேவை. நீர்நிலைகளில் எச்சரிக்கை தேவை. வாகன சுகம் குறையும்.

## தாய்லாந்தில் இருந்து மும்பைக்கு
# கடத்தி வரப்பட்ட 67 அரிய வகை விலங்குகள் மீட்பு..!

**மும்பை, செப். 16-**

தாய்லாந்தில் இருந்து மும்பைக்கு கடத்தி வரப்பட்ட 67 வகை அரிய விலங்குகளை விமான நிலைய அதிகாரிகள் மீட்டனர்.

தாய்லாந்து நாட்டின் பாங்காக்கில் இருந்து நேற்று முன்தினம் இரவு மும்பை சர்வதேச விமான நிலையத்திற்கு விமானம் வந்தது. அந்த விமானத்தில் பயணித்த பயணிகளின் உடைமைகளை விமான நிலைய அதிகாரிகள் சோதனை செய்தனர். அப்போது பயணி ஒருவரின் சூட்கேசில் அரிய வகை விலங்குகள் கடத்தி வரப்பட்டதை அதிகாரிகள் கண்டுபிடித்தனர். இதையடுத்து, கடத்தி வரப்பட்ட கீரி உள்பட 67 அரிய வகை விலங்குகளை மீட்ட அதிகாரிகள், பயணியிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும், மீட்கப்பட்ட அரிய வகை விலங்குகளை மீண்டும் தாய்லாந்திற்கே திருப்பி அனுப்ப உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும், இந்த கடத்தல் சம்பவம் தொடர்பாக விமான நிலைய அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வரி - தடைகளை விதிப்பதால் பிரச்சினைகளை தீர்க்க முடியாது
## அதிபர் ட்ரம்புக்கு சீனா பதிலடி

**பீஜிங், செப். 16-**

வரி-தடைகளை விதிப்பதால் பிரச்சினைகளை தீர்க்க முடியாது என்று ட்ரம்புக்கு சீனா கூறியுள்ளது.

ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணை வாங்கும் சீனாவுக்கு 50 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை வரி விதிக்க வேண்டும் என்று நேட்டோ மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அழுத்தம் கொடுத்து வரு கிறார். இந்த நிலையில் ட்ரம் புக்கு சீனா பதிலடி கொடுத்து உள்ளது. இது தொடர்பாக சீனாவின் வெளியுறவு அமைச்சர் வாங் யி கூறிய தாவது:-சீனா ஒரு பொறுப்பான பெரிய நாடு.

அமைதி மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகளில் சிறந்த சாதனையைக் கொண்ட நாடு ஆகும். போரால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. வரி மற்றும் பொருளாதார தடைகள் விதிப்பது பிரச்சனையை இன்னும் சிக்கலாக தான் மாற்றும். சீனா போர்களில் பங்கேற்கவோ அல்லது திட்டமிடவோ இல்லை. அமைதிப் பேச்சு வார்த்தைகளை ஊக்குவிப்பதும், பேச்சு வார்த்தை மூலம் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வை காண்பதும் சீனா வின் நோக்கமாகும் என்றார்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் மேலும் சரிவு

**மேட்டூர், செப். 16-**

மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று 119.71 அடியாக குறைந்தது.

மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று (செப். 15) காலை 119.72 அடியிலிருந்து 119.71 அடியாக குறைந்தது. அணைக்கு வரும் நீரின் அளவு விநாடிக்கு 15,724 கன அடியிலிருந்து விநாடிக்கு 18,564 கன அடியாக அதிகரித்துள்ளது.

அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு நீர்மின் நிலையங்கள் வழியாக விநாடிக்கு 17,000 கன அடி நீர் திறக்கப்படுகிறது. கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்திற்கு மேல்மட்ட மதகுகள் வழியாக விநாடிக்கு 800 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையின் நீர் இருப்பு 93.01 டிஎம்சியாக உள்ளது.

## பா.ம.க. கூட்டத்தில் முதல்முறையாக டாக்டர் ராமதாஸின் மகள் பேச்சு

**கிருஷ்ணகிரி, செப். 16-**

முதல்முறையாக டாக்டர் ராமதாசின் மகள் பா.ம.க. கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார்.

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட பா.ம.க. பொதுக்குழு கூட்டம் ஒசூரில் நேற்று முன்தினம் டாக்டர் ராமதாஸ் தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட டாக்டர் ராமதாசின் மகள் ஸ்ரீ காந்தி பரசுராமன் முதன்முதலாக நிர்வாகிகள் மத்தியில் பேசினார். அப்போது அவர் பேசியதாவது:-

டாக்டர் ராமதாஸ், அரசியல் அனுபவத்திலும் துணிவான தியாகத்திற்கும், ஓய்வறியாத உழைப்பிற்கும் எடுத்துக்காட்டாக அன்றும், இன்றும் இருந்து வருகிறார். அவருக்கு ஈடாக, இணையாக இதுவரை யாரையும் பார்த்ததில்லை, இனி பார்க்கப்போவதும் இல்லை. முதிர்ந்த வயதிலும், உள்ளத்தில் உறுதி குறையாமலும், அரசியல் களத்தில் துடிப்போடு இருக்கும் அவருக்கு துணையாக நிற்பது அவரது மகளாகிய எனது கடமை ஆகும். மகளாக இருப்பது மட்டுமின்றி ஒரு படி மேலாக தொண்டராக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இங்கு வந்திருக்கிறேன்.

டாக்டர் ராமதாசின் அனைத்து முயற்சிக்கும் அவருடன் துணை நின்று லட்சோப லட்சம் தொண்டர்களுடன் இருக்க விரும்புகிறேன். அவரது தலைமையிலும், வழிகாட்டுதலின்படியும் பா.ம.க. பேராற்றலுடன், வலிமையுடன் போராடும் சக்தியாக மாறியுள்ளது.

டாக்டர் ராமதாசின் ஒற்றை தலைமையை ஏற்று அவரின் அனுபவ வழிகாட்டுதலுடன், ஒற்றுமையுடன் தொடர்ந்து போராடி வெற்றி பெறுவோம். இந்த நம்பிக்கையை உங்களிடம் விதைக்கத்தான் ஒரு தொண்டராக உங்கள் முன்பு நிற்கிறேன் இவ்வாறு அவர் பேசினார்.



பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 117-வது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (15.9.2025 - திங்கட் கிழமை), புதுடெல்லி பாராளுமன்ற வளாகத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணாவின் திருஉருவச் சிலைக்கு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், கழக கொள்கை பரப்புச் செயலாளரும், முன்னாள் மத்திய அமைச்சருமான மு.தம்பிதுரை எம்.பி., கழக வழக்கறிஞர் பிரிவுச்செயலாளர் இன்பதுரை எம்.பி., செங்கல்பட்டு கிழக்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் தனபால் எம்.பி. உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

### அண்ணாவின் 117-வது பிறந்த நாள்:

# முதல்வர் மு.க.ஸ்டாலின் மரியாதை



**சென்னை, செப். 16-**

பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளையொட்டி சென்னையில் உள்ள அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாள் நேற்று (செப். 15) தமிழகம் முழுவதும் கொண்டாடப்பட்டது. இதையொட்டி, சென்னை அண்ணா சாலையில் உள்ள அண்ணாவின் திருவுருவச் சிலைக்குக் கீழ் உள்ள திருவுருவப் படத்திற்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து துணை முதல்வர், அமைச்சர்களும் மரியாதை செலுத்தினர்.

முன்னதாக முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில், "தமிழன்னை தந்திட்ட தலைமகன். திராவிட முன்னேற்றக் கழகம் எனும் நம் உயிரைத் தாயென அளித்திட்ட திருமகன், பேறறிஞர் அண்ணா தலைமகன் நிமிர்த்திய தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டோம். என்று குறிப்பிட்டிருந்தார்.

### தலைமகன் அண்ணா நிமிர்த்திய

# தமிழ்நாட்டை ஒருபோதும் தலைகுனிய விடமாட்டோம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு

**சென்னை, செப். 16-**

தலைமகன் அண்ணா நிமிர்த்திய தமிழ்நாட்டை ஒருபோதும் தலைகுனிய விடமாட்டோம் என்று ஏ.ஐ. தொழில்நுட்பம் மூலம் உருவாக்கப்பட்ட அண்ணாவின் வீடியோ ஒன்றை வெளியிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளை முன்னிட்டு, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 'எக்ஸ்' தளத்தில் ஏ.ஐ. தொழில்நுட்பம் மூலம் உருவாக்கப்பட்ட அண்ணாவின் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த பதிவில், "தமிழன்னை தந்திட்ட தலைமகன். திராவிட முன்னேற்றக் கழகம் எனும் நம் உயிரைத் தாயென அளித்திட்ட திருமகன், பேரறிஞர் அண்ணா. தலைமகன் நிமிர்த்திய தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டோம்." என்று மு.க.ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.

### பீகாரில் தொகுதி பங்கீட்டில் இழுபறி:

# 243 தொகுதிகளிலும் போட்டியிட தேஜஸ்வி யாதவ் அதிரடி முடிவு

**பாட்னா, செப். 16-**

பீகாரில் தொகுதி பங்கீட்டில் இழுபறி 243 தொகுதிகளிலும் போட்டியிடுவோம் என்று தேஜஸ்வி யாதவ் கூறியுள்ளார்.

பீகாரில் நிதிஷ்குமார் தலைமையில் ஐக்கிய ஜனதா தளம் - பா.ஜ.க கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது. 243 தொகுதிகளை கொண்ட அங்கு அக்டோபர் அல்லது நவம்பரில் சட்ட சபை தேர்தல் நடைபெற உள்ளது. ஐக்கிய ஜனதா தளம் - பா.ஜ.க கூட்டணிக்கு எதிராக ராஷ்டிரிய ஜனதா தளம் (ஆர்.ஜே.டி), காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வலுவான கூட்டணியை அமைத்து உள்ளன. தேர்தல் நெருங்கும் நிலையில் பிரச்சாரம் தீவிரமடைந்து



வருகிறது.

ராஷ்டிரிய ஜனதா தளம் (ஆர்.ஜே.டி.), காங்கிரஸ், இடதுசாரிகள், விகாஷீல் இன்சான் கட்சி, ராஷ்ட்ரிய லோக் ஜனசக்தி, ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா ஆகிய கட்சிகளை கொண்ட மகா பந்தன் கூட்டணியில் (இன்டியா கூட்டணி) இன்னும் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை முடிவுக்கு வராமல் இழுபறியில் உள்ளது.

இந்த நிலையில், முசாபர்பூரில் நடைபெற்ற பிரச்சார கூட்டத்தில் பேசிய ராஷ்டிரிய ஜனதா தள தலைவர் தேஜஸ்வி யாதவ், பீகாரில் உள்ள 243 தொகுதிகளிலும் ஆர்.ஜே.டி. போட்டியிடும் என்று அதிரடியாக அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் பேசியதாவது:"நாங்கள் மீண்டும் வருவோம். இதை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள். பீகாரில் உள்ள அனைத்து தொகுதிகளிலும் (243) நான் போட்டியிடுவதாகவே நினைத்துக் கொள்ளுங்கள். முசாபர்பூர், போச்சாஹன், கைக்கட், காந்தி போன்ற தொகுதிகளில் தொண்டர்கள் தயாராக இருக்க வேண்டும்."இவ்வாறு அவர் பேசியுள்ளார்.

# மாநிலத்தின் உரிமைக்கு ஓங்கி குரல் எழுப்பியவர் 'அண்ணா'

## த.வெ.க. தலைவர் விஜய் புகழஞ்சலி

**சென்னை, செப். 16-**

மாநில உரிமைக்காக ஓங்கிக் குரல் எழுப்பியவர் என்றும், தமிழக மக்களை ஏமாற்றாமல் உண்மையாக உழைத்தவர் பேரறிஞர் அண்ணா என்றும் அண்ணா பிறந்தநாளில் த.வெ.க. தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

முன்னாள் முதல்வர் அண்ணா பிறந்தநாளையொட்டி, த.வெ.க. தலைவர் விஜய் தன்னுடைய எக்ஸ் தளத்தில், அவர் குறித்து பதிவிட்டுள்ளார். அவருடைய பதிவில், "மாநில உரிமைக்காக ஓங்கிக் குரல் எழுப்பியவர். இருமொழிக் கொள்கையைத் தமிழகத்திற்குத் தந்தவர். தமிழ்நாடு என்று சட்டப்



படி பெயர் மாற்றியவர். சமூக நீதியைக் கொள்கையாகக் கொண்டிருந்தவர். சுயமரியாதைத் திருமணத்தைச் சட்டமாக்கியவர். குடும்ப ஆதிக்கமற்ற அற்புத அரசியல் தலைவர். கொள்கை வழி நின்றவர்.

கனிவின் திருவுருவம். இரட்டை வேடம் போட்டுத் தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றாமல், அவர்களுக்காக உண்மையாக உழைத்தவர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா. தேர்தல் அரசியலில் அசாத்திய வியூகத்தை வகுத்து, மாபெரும் ஆட்சி அதிகார மாற்றத்திற்கு வழிவகுத்த பேரறிஞரின் பிறந்த நாளில் அவரைப் போற்றி வணங்குவோம். 'மக்களிடம் செல்' என்ற அவரது அரசியல் மந்திரத்தைப் பின்பற்றி, 1967 தேர்தல் அரசியல் வெற்றி விளைவை, ஆட்சி மாற்றத்தை மக்கள் ஆதரவுடன் மீண்டும் தமிழகத்தில் நிகழ்த்திக் காட்ட உறுதி ஏற்போம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# வருமான வரி கணக்கை தாக்கல் செய்ய கால அவகாசம் நீட்டிப்பா?

## வருமான வரித்துறை மறுப்பு

**புதுடெல்லி, செப். 16-**

வருமான வரி கணக்கை தாக்கல் செய்ய கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக வெளியான தகவலுக்கு வருமான வரித்துறை மறுப்பு தெரிவித்துள்ளது.

2024-2025 நிதியாண்டுக்கான வருமான வரி கணக்கு தாக்கல் செய்ய கடந்த ஜூலை 31-ந்தேதியுடன் அவகாசம் முடிவடைய இருந்த நிலையில், அவகாசத்தை செப்டம்பர் 15-ம் தேதி (நேற்று) வரை நீட்டித்து வருமான வரித்துறை அறிவிப்பு வெளியிட்டது. ஐ.டி.ஆர். படிவங்களில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் காரணமாக கால அவகாசம் நீட்டிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அதன்படி வருமான வரி கணக்கு தாக்கல் செய்வதற்கான கெடு நேற்றுடன் நிறைவடைந்தது. நேற்றைய தேதிக்குள் வருமான வரி கணக்கு தாக்கல் செய்யவில்லை என்றால், வருமானத்திற்கு ஏற்ப அபராதம் விதிக்கப்படும். இதற்கிடையில், வருமான வரி கணக்கு தாக்கல் செய்ய மேலும் கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக வெளியான தகவலுக்கு வருமான வரித்துறை மறுப்பு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் கடைசி நாளான நேற்று வரி செலுத்துவோர் அவசர அவசரமாக கணக்குகளை தாக்கல் செய்த நிலையில், இணையதளத்தில் தொழில்நுட்ப சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதால் பலர் அவதியடைந்தனர்.

### 10 நாட்கள் கெடு நிறைவடைந்தது:

# அ.தி.மு.க. மீண்டும் ஒன்றிணைய வேண்டும் என்பதே எனது நோக்கம்

## செங்கோட்டையன் பேட்டி

**ஈரோடு, செப். 16-**

அ.தி.மு.க.வை ஒருங்கிணைக்க வேண்டும் என்ற கருத்துக்கு மிகுந்த வரவேற்பு கிடைத்துள்ளது என செங்கோட்டையன் தெரிவித்தார்.

அ.தி.மு.க. ஒருங்கிணைப்பு தொடர்பாக முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் விதித்த 10 நாட்கள் கெடு நேற்றுடன் நிறைவடைந்த நிலையில், ஈரோட்டில் அவர் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது;- "அ.தி.மு.க. மீண்டும் ஒன்றிணைய வேண்டும் என்பதே எனது நோக்கம். அ.தி.மு.க.வை மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமர வைக்க வேண்டும் என்பதற்காகவே மனம் திறந்து பேசினேன். தொண்டர்கள், மக்களின் கருத்தையே நான் பிரதிபலித்தேன். அ.தி.மு.க.வை ஒருங்கிணைக்க வேண்டும் என்ற கருத்துக்கு மிகுந்த வரவேற்பு கிடைத்துள்ளது.

அண்ணாவின் பெயரால் எம்.ஜி.ஆர். உருவாக்கிய அ.தி.மு.க.வை ஜெயலலிதா கட்டிக் காத்தார். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று பேரறிஞர் அண்ணா கூறியுள்ளார். எனவே, மறப்போம், மன்னிப்போம். அ.தி.மு.க. ஒன்றிணையும் விவகாரம் குறித்து புரிய வேண்டியவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். 2026-ல் அ.தி.மு.க. ஆட்சி மலர அனைவரும் உறுதுணையாக இருக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### வரும் 22-ம் தேதி

# பிரதமர் மோடி திரிபுரா பயணம்

**அகர்தலா, செப். 16-**

பிரதமர் மோடி வருகிற 22-ம் தேதி திரிபுரா பயணம் மேற்கொள்ள இருக்கிறார்.

பிரதமர் மோடி வடகிழக்கு மாநிலங்களில் தற்போது சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். மிசோரம், மணிப்பூர், அசாம் மாநிலங்களில் சுற்றுப்பயணத்தை முடித்துள்ள அவர் மீண்டும் வருகிற 22-ம் தேதி திரிபுரா மாநிலத்துக்கு செல்கிறார். அங்கு திரிபுரேஸ்வரி ஆலய சீரமைப்பு திட்டத்தை அவர் தொடங்கி வைக்கிறார்.

அதோடு அந்த ஆலயத்தில் சிறப்பு பூஜைகளையும் பிரதமர் மோடி நடத்த உள்ளார். பிரதமர் மோடி தொடங்கி வைக்கும் திரிபுரேஸ்வரி ஆலய சீரமைப்பு திட்டம் ரூ.51 கோடி செலவில் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

# ஒப்பந்த செவிலியர்களின் ஊதிய நிலுவை: சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு வாதம்

**டெல்லி, செப். 16-**

ஒப்பந்த செவிலியர்களின் ஊதிய நிலுவை தொடர்பான வழக்கில், மத்திய அரசிடமிருந்து வரவேண்டிய உரிய பணம் கிடைக்காததால் ஒப்பந்த செவிலியர்களின் ஊதியம் நிலுவையில் உள்ளது என்று தமிழக அரசு தரப்பில் வாதிடப்பட்டது.

தமிழகத்தில் நிரந்தர செவிலியர்களுக்கு இணையாக ஒப்பந்த செவிலியர்களுக்கும் தொகுப்பு ஊழியம் வழங்க வேண்டும் என்ற ஐகோர்ட் உத்தரவை எதிர்த்து தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்தது. இந்த மேல்முறையீட்டு மனு நேற்று சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தது. அப்போது, மத்திய அரசிடமிருந்து வரவேண்டிய உரிய பணம் கிடைக்காததால் ஒப்பந்த செவிலியர்களின் ஊதியம் நிலுவையில் உள்ளது என்று தமிழக அரசு தரப்பில் வாதிடப்பட்டது.

இதனை ஏற்க மறுத்த சுப்ரீம் கோர்ட், ஒப்பந்த செவிலியர்களின் உழைப்பை தமிழக அரசு சுரண்டுகிறது. எதற்கெடுத்தாலும் மத்திய அரசை குறை சொல்லிக்கொண்டே இருக்காதீர்கள் என்று தெரிவித்தது. ஊழியர்களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டியது தமிழக அரசின் பொறுப்பு என குறிப்பிட்ட சுப்ரீம் கோர்ட், அதை எக்காரணம் கொண்டும் தட்டிக்கழிக்க முடியாது என தெரிவித்தது.

மேலும், இலவசங்களுக்கு கொடுக்க பணம் இருக்கிறது ஆனால் பணி செய்வர்களுக்கு தர பணம் இல்லையா? என்றும் தமிழக அரசுக்கு சுப்ரீம் கோர்ட் கேள்வி எழுப்பியது. இதையடுத்து, இந்த வழக்கில் பதில் அளிக்க மத்திய அரசு, செவிலியர் சங்கம் பதில் அளிக்க நோட்டீஸ் பிறப்பித்து வழக்கை சுப்ரீம் கோர்ட் ஒத்திவைத்தது.

# பார்லி.யில் காப்பீட்டு திருத்த மசோதா தாக்கல் செய்யப்படுவது எப்போது..?நிதியமைச்சர் பதில்

**புதுடெல்லி, செப். 16-**

காப்பீட்டு திருத்த மசோதா எப்போது தாக்கல் செய்ய வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

காப்பீட்டு துறையில் அன்னிய நேரடி முதலீட்டு உச்சவரம்பு 74 சதவீதத்தில் இருந்து 100 சதவீதமாக உயர்த்தப்படும் என்று நடப்பாண்டு பட்ஜெட் உரையில் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார்.

இந்நிலையில், நவம்பர் மாதம் தொடங்க உள்ள பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில், அன்னிய நேரடி முதலீட்டு உச்சவரம்பை 100 சதவீதமாக உயர்த்த வகை செய்யும் காப்பீட்டு திருத்த மசோதா தாக்கல் செய்யப்படுமா என்று நிர்மலா சீதாராமனிடம் ஒரு செய்தி நிறுவனம் சார்பில் கேட்கப்பட்டது. அதற்கு அவர், ''நான் எதிர்பார்க்கிறேன்'' என்று பதில் அளித்தார்.

# 2026 டிசம்பர் முதல் குலசேகரன்பட்டினம் ராக்கெட் ஏவுதளம் பயன்பாட்டுக்கு வரும்

## இஸ்ரோ தலைவர் நாராயணன் பேட்டி

**குமரி, செப். 16-**

குலசேகரன்பட்டினத்தில் ராக்கெட் ஏவுதளத்தில் இருந்து ராக்கெட் விண்ணில் ஏவப்படும் என்று இஸ்ரோ தலைவர் நாராயணன் தெரிவித்துள்ளார்.

இஸ்ரோ தலைவர் நாராயணன் தனது குடும்பத்துடன் நேற்று முன்தினம் கன்னியாகுமரிக்கு வந்தார். அங்கு பூம்புகார் படகு துறையில் இருந்து தனி படகு மூலம் கடல் நடுவே அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்துக்கு சென்று பார்வையிட்டார். பிறகு அங்கிருந்து கண்ணாடி நடைபாலம் வழியாக நடந்து சென்று கடலின் அழகை ரசித்ததோடு திருவள்ளுவர் சிலையையும் பார்த்து வியந்தார். பின்னர் அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது கூறியதாவது:-

நாசா மற்றும் இஸ்ரோ இணைந்து ரூ.10 ஆயிரத்து 360 கோடியில் இந்தியாவில் உருவாக்கிய செயற்கை கோள் கடந்த ஜூலை மாதம் விண்ணில் ஏவப்பட்டது. இதன் மூலம் ஆண்டின் 365 நாளும் துல்லியமாக செயல்பட்டு 12 நாளுக்கு ஒருமுறை பூமியை சுற்றி வந்து கண்காணித்து பேரிடர், காலநிலை போன்ற தகவல்களை செயற்கைக்கோள் மூலம் அனுப்ப முடியும். இது இந்திய மக்களுக்கு பெருமிதமான தருணம்.

ரூ.1000 கோடியில் நாட்டின் 2-வது ராக்கெட் ஏவுதளம் விரைவில் குலசேகரன் பட்டினத்தில் அமைய உள்ளது. இதற்காக தமிழக அரசின் முயற்சியோடு 2,300 ஏக்கர் நிலம் இஸ்ரோ பெற்றுள்ளது. அடுத்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் குலசேகரப்பட்டினத்தில் இருந்து 500 கிலோ எடையுள்ள செயற்கை கோளுடன் ராக்கெட் விண்ணில் ஏவப்படும். விவேகானந்தர் நினைவு மண்டபம், திருவள்ளுவர் சிலையை இணைக்கும் கண்ணாடி பாலம் நன்றாக உள்ளது. தமிழக அரசுக்கு எனது பாராட்டுகள். இவ்வாறு அவர் கூறினார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# நாய் கடியால் பாதிக்கப்பட்டவர்கள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்

## மத்திய அரசு வெளியிட்டது

**புதுடெல்லி, செப். 16-**

நாய் கடியால் பாதிக்கப்பட்டவர்கள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டு விளக்கமளித்துள்ளது.

நாடு முழுவதும் நாய்க்கடி பிரச்சினை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சமீபத்தில் தலைநகர் டெல்லியில் தெருக்களில் சுற்றித்திரியும் நாய்களைப் பிடித்து காப்பகங்களில் அடைக்கவும், கருத்தடை ஊசி போடவும் சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டிருந்தது. இந்த உத்தரவுக்கு பல்வேறு தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்தனர். டெல்லியில் விலங்குகள் நல ஆர்வலர்கள் போராட்டம் நடத்தினர்.

இதையடுத்து, டெல்லியில் தெருநாய்களை பிடித்து காப்பகத்தில் அடைக்க வேண்டும் என பிறப்பிக்கப்பட்ட உத்தரவை சுப்ரீம் கோர்ட் நிறுத்தி வைத்தது. தெரு நாய்களைப் பிடித்து கருத்தடை ஊசி மற்றும் உரிய தடுப்பூசிகள் செலுத்தி மீண்டும் தெருவிலேயே விட வேண்டும் எனவும், ஆக்ரோஷமான, நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்ட நாய்களை மீண்டும் தெருவில் விடாமல் காப்பகத்தில் தனியாக அடைத்து வைக்க வேண்டும் எனவும் கோர்ட் உத்தரவிட்டது.

இந்த நிலையில், நாய் கடியால் பாதிக்கப்பட்டவர்கள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து மத்திய அரசின் சுகாதார அமைச்சகம் விளக்கமளித்துள்ளது.

அதன்படி நாய் கடித்த காயத்தை உடனடியாக சோப்பு, சுத்தமான நீர், கிருமிநாசினி மூலம் கழுவ வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே போல், நாய் கடித்த உடன் சிகிச்சை எடுக்க வேண்டும் எனவும், நாய் கடித்த காயத்தின் மீது மிளகாய், கடுகு, எண்ணெய் போன்ற எதையும் தேய்க்கக் கூடாது எனவும் கூறப்பட்டுள்ளது.

மேலும், நாய் கடியால் பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு சென்று ரேபிஸ் தடுப்பூசியின் அனைத்து தவணைகளையும் முறையாக செலுத்த வேண்டும் என சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளது.

# தீபாவளி பண்டிகைக்கு மறுநாள் அரசு விடுமுறை விட கோரிக்கை

**சென்னை, செப். 16-**

தீபாவளி பண்டிகைக்கு மறுநாள் அரசு விடுமுறை விட வேண்டும் என்று அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் இப்போதே கோரிக்கை விடுக்க தொடங்கியுள்ளனர்.

தீபாவளிக்கு எத்தனை நாள் விடுமுறை விட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பண்டிகை என்றாலே கொண்டாட்டம் தான். அதுவும் புத்தாடை அணிந்து, பட்டாசு வெடித்து, இனிப்பு வழங்கி கொண்டாடும் பண்டிகையான தீபாவளி வந்தால், சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவருக்குமே கூடுதல் கொண்டாட்டம்.

அந்த வகையில், இந்த ஆண்டு அக்டோபர் மாதம் 20-ம் தேதி (திங்கட்கிழமை) தீபாவளி பண்டிகை வருகிறது. பொதுவாக, தீபாவளி பண்டிகை சமயத்தில் ஒரு நாளைக்கு முன்போ, பின்போ தேவைக்கு ஏற்ப அரசு விடுமுறை விட்டு வருகிறது. அதற்கு பதிலாக அந்த மாதத்தில் ஒரு சனிக்கிழமை வேலை நாளாக அறிவித்து அது ஈடுசெய்யப்படுகிறது.

எனவே, இந்த ஆண்டும் தீபாவளி பண்டிகைக்கு மறுநாள் அரசு விடுமுறை விட வேண்டும் என்று அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் இப்போதே கோரிக்கை விடுக்க தொடங்கியுள்ளனர். ஏற்கனவே, தீபாவளிக்கு முந்தைய இரு நாட்கள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை என்பதால் வழக்கமான விடுமுறை நாள் கணக்கில் வந்துவிடுகிறது. தீபாவளிக்கு அடுத்த நாளும் விடுமுறை விடப்பட்டால், தொடர்ந்து 4 நாட்கள் விடுமுறை கிடைத்துவிடும். பண்டிகையையும் சொந்த ஊரில் சென்று கொண்டாடிவிட்டு வருவதற்கான நல்ல சூழ்நிலை ஏற்படும்.

பொதுவாக, தீபாவளி நெருங்கும் சமயத்தில்தான் அரசு இதுபோன்ற விடுமுறையை அறிவிக்கும். கடந்த ஆண்டும் அதுபோலத்தான் அறிவிக்கப்பட்டது. ஆனால், இந்த முறை முன்கூட்டியே அறிவித்தால், ரெயில், பஸ்களில் டிக்கெட் முன்பதிவு செய்ய வசதியாக இருக்கும் என்று அனைவரும் கருதுவதால், அரசு முன்கூட்டியே தீபாவளி விடுமுறை அறிவிப்பை வெளியிட வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது.

### மும்பையில் நடுவழியில் நின்ற

# மோனோ ரயிலில் இருந்து பயணிகள் பத்திரமாக மீட்பு



**மும்பை, செப். 16-**

மும்பையில் மோனோ ரயில் அந்தரத்தில் நின்றதையடுத்து பயணிகள் தவித்தனர். பின்னர் அவர்கள் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

வடாலாவில் உள்ள அன்டாப் ஹிலுக்கும் குரு தேக் பகதூர் நகர் மோனோ ரயில் நிலையத்திற்கும் இடையில் இந்த சம்பவம் நடந்துள்ளது. காலை 7.16 மணிக்கு "தொழில்நுட்பக் கோளாறு" காரணமாக இந்த சம்பவம் நடந்ததாக மும்பை காவல்துறை சார்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 45 நிமிடங்களுக்குப் பிறகு சிக்கித் தவித்த 17 பயணிகள் பத்திரமாக மீட்கப்பட்டதாகவும், பின்னர் வேறு மோனோ ரயில் மூலம் அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கனமழையின்போது, மும்பையில் வெவ்வேறு இடங்களில் இரண்டு மோனோ ரயில்கள் இதேபோல் நடுவழியில் நின்றது குறிப்பிடத்தக்கது.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



எடப்பாடி பழனிச்சாமியை முதல்வர் வேட்பாளராக அறிவிக்கும் பட்சத்தில் அதை அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் ஏற்றுக் கொள்ள வாய்ப்பே இல்லை. அ.தி.மு.க ஒன்றிணைப்புக்கான 10 நாட்கள் கெடு முடிந்தது குறித்து அதற்கான விளக்கத்தை செங்கோட்டையன் அளிப்பார்.

- டி.டி.வி.தினகரன்



பா.ஜ. யாரையும் எதிரி கட்சியாக நினைக்கவில்லை. எதிர்க்கட்சியாகதான் நினைக்கிறோம். தனிப்பட்ட விமர்சனங்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஓ.பன்னீர் செல்வத்திடம் நான் பேசி இருக்கிறேன். தற்போது செங்கோட்டையன் கட்சியிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறார். அது உள்கட்சி பிரச்சினை அதை நான் பேச விருப்பமில்லை.

- நயினார் நாகேந்திரன்



யார் அரசியலுக்கு வந்தாலும் தி.மு.க.வை பற்றிப் பேசினால் தான் அவர்களுக்கு ஒரு அடையாளம் கிடைக்கும் என்பது மிகத் தெளிவான ஒன்று. அதனால் எல்லோரும் தி.மு.க.வை தான் விமர்சனம் செய்வார்கள். அந்தவகையில் தி.மு.க.வை பற்றி பேசி விஜய் அடையாளம் தேடிக் கொள்கிறார்.

- கனிமொழி



விஜய்யின் அரசியல் பிரவேசம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. அந்த தாக்கம் திமுக கூட்டணியை பாதிக்காது. தேர்தல் களத்தில் விஜய் கூறுவது போன்ற நிலை அமையாது. மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி மிகப்பெரிய வெற்றி பெறும். அதை தடுக்கும் சக்தியை விஜய்யால் ஏற்படுத்த முடியாது. தி.மு.க. கூட்டணியில் சிறு நெருடல்கூட ஏற்படாது.

- வைகோ

# ஒட்டன்சத்திரத்தில் அண்ணாவின் பிறந்த நாள் விழா: அமைச்சர் சக்கரபாணி மாலை அணிவித்து மரியாதை



**ஒட்டன்சத்திரம், செப். 16-**
தமிழக முழுதும் தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணாவின் 117 ஆவது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டு வரும் நிலையில், தொப்பம்பட்டி வடக்கு ஒன்றியத்தின் சார்பில் கள்ளிமந்தயத்தில் அமைக்கப்பட்டிருந்த பேரறிஞர் அண்ணாவின் உருவப்படத்திற்கு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். அதனைத் தொடர்ந்து தமிழகத்தை தலைகுனிய விடமாட்டேன் என்ற தலைப்பில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட ஒன்றிய அரசுக்கு எதிராக உறுதிமொழி ஏற்ற பின் அமைச்சர் பேசுகையில், தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தை தவிர வேறு எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தமிழ்நாட்டின் பண்பாடு, மொழி, கலாச்சாரம் அனைத்தையும் பா.ஜ.க.வுக்கு அடகு வைத்து அடிமையாக்கி விடுவார்கள், தேர்தல் சமயத்தில் சொன்ன வாக்குறுதிகள் மட்டுமல்லாமல் சொல்லாத வாக்குறுதிகளையும் நிறைவேற்றி தமிழ்நாடு முதலமைச்சர் பொற்கால ஆட்சி நடத்தி வருகிறார் என பேசினார்இந்நிகழ்வில் மாவட்டத் துணைச் செயலாளர் ராஜாமணி, ஒன்றிய செயலாளர் பி.சி. தங்கம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆனந்தராஜ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் தண்டபாணி உள்ளிட்ட நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



**ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் பேருந்து நிலையம் அருகே அண்ணாவின் 117-வது பிறந்த நாளை முன்னிட்டு வனம் மற்றும் கதர் தொழில்துறை அமைச்சர் ராஜகண்ணப்பன் தலைமையில் அண்ணாவின் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் தி.மு.க.னர் உறுதி மொழியும் எடுத்துக் கொண்டனர். இதில் ஒன்றிய செயலாளர்கள் பூபதி மணி, கோவிந்தராஜன் பேரூராட்சி சேர்மன் ஷாஜகான் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.**

### திருமங்கலத்தில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாள் விழா:

# தி.மு.க மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் தலைமையில் மரியாதை செலுத்தி உறுதிமொழி ஏற்பு



**திருமங்கலம், செப். 16-**
தி.மு.க தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் திருமங்கலம் நகரில் பேரறிஞர் அண்ணாவின் 117 வது பிறந்த நாள் விழா மற்றும் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் என ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தின் கீழ் தி.மு.க.வில் இணைந்த குடும்பங்கள் உறுதி மொழி ஏற்றிடும் நிகழ்வு எழுச்சியுடன் நடைபெற்றது. அதன்படி முதல் நிகழ்வாக மதுரை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் மலர்கள் தூவி மரியாதை செலுத்தியதுடன் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுக்கு இனிப்புகள் வழங்கினார்.

இதனை தொடர்ந்து உழவர் சந்தை முன்பாக திருமங்கலம் நகர் கழக செயலாளர் மு.சி.சோ.பா.ஸ்ரீதர் ஏற்பாட்டின் பேரிலும், திருமங்கலம் கக்கன் காலனி பகுதி ஸ்ரீ காளியம்மன் கோவில் அருகில் திருமங்கலம் நகர்மன்ற தலைவர் மு.ரம்யா முத்துக்குமார், மெப்கோ தொழிற்சங்க தலைவர் இரா.முத்துக்குமார் ஆகியோரது ஏற்பாட்டின் பேரிலும், திருமங்கலம் ரயில்வே கேட் அருகில் நகர் மன்ற துணைத் தலைவர் ஆதவன் அதியமான், முன்னாள் எம்.எல்.ஏ லதா அதியமான் ஆகியோரது ஏற்பாட்டின் பேரிலும் தமிழ்நாட்டை தலை குனிய விடமாட்டேன் என தெற்கு மாவட்டம் முழுவதிலும் 930 பாகங்களில் உறுதி மொழி ஏற்றிடும் நிகழ்வுகள் நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் சிறப்பாளராக கலந்து கொண்டு தலைமையேற்று ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தின் மூலம் கழகத்தில் இணைந்துள்ள குடும்பங்களுடன் சேர்ந்து தமிழ்நாட்டை தலை குனிய விடமாட்டேன் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விகிதாச்சாரத்தை குறைக்கும் தொகுதி மறுவரையறைக்கு எதிராக போராடுவேன், மாணவர்களுக்கு உரிய கல்வி நிதி கிடைக்க போராடுவேன் என உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.முன்னதாக கற்பகநகர் பகுதியைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி ஒருவரின் சிகிச்சைக்காக மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் நிதியுதவி வழங்கினார்.

இந்நிகழ்வுகளில் திருமங்கலம் தொகுதி பொறுப்பாளர் டிஸ்கோ அலாவுதீன், போடி காமராஜ்,மாவட்ட அவை தலைவர் நாகராஜ், ஒன்றிய செயலாளர்கள் மதன் குமார், தங்கப்பாண்டி, பொதுக்குழு உறுப்பினர் சிவ முருகன்,மாவட்ட அணி அமைப்பாளர்கள் கிருத்திகா தங்கப்பாண்டி, செல்வேந்திரன், விமல்,ராஜசேகர், சிவனேசன் , ஜெயச்சந்திரன், துணை அமைப்பாளர்கள் கவிஸ்ரீ தினேஷ், சுரேஷ், காண்டை தவமணி முருகன், ஜெகதீஷ், நகர பொருளாளர் கவுன்சிலர் சின்னச்சாமி, துணைச் செயலாளர்கள் செல்வம்,சுதாகர், கவுன்சிலர்கள் திருக்குமார், வீரகுமார், ஜஸ்டின் திரவியம், ரம்ஜான் பேகம், காசிபாண்டி,ரவி, முத்து காமாட்சி, வினோத், முருகன், ஜமிலாபவுசியா, மங்களகவுரி, சங்கீதா,நபீஷா பேகம் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# 80 லட்சத்திற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களின் நம்பிக்கை பெற்றுள்ள ஐ.ஐ.எப்.எல். பைனான்ஸ்..!

**கோவை, செப். 16-**
தங்கக் கடன் எங்களுடையது என்ற நம்பிக்கையுடன், கோடிக்கணக்கான இந்தியர்களின் நம்பிக்கைக்குரிய வளர்ச்சி கூட்டாளியாக ஐ.ஐ.எப்.எல். பைனான்ஸ் தொடர்ந்து முன்னேறிக் கொண்டு வருகிறது. தனிநபர்களின் கனவுகளையும், புதிய இந்தியாவின் வளர்ச்சியை முன்னெடுத்து வரும் எம்.எஸ்.எம்.இ. நிறுவனங்களின் முயற்சிகளையும் புரிந்து, எளிதில் கிடைக்கும் நிதி உதவிகள் மூலம் இந்த முன்னேற்றத்திற்கு வலு சேர்க்க ஐ.ஐ.எப்.எல். பைனான்ஸ் உறுதியாக செயல்படுகிறது. இது குறித்து ஐ.ஐ.எப்.எல். பைனான்ஸ் தங்கக் கடனின் வணிகப்பிரிவின் தலைவர் மணிஷ் மயங்க் கூறுகையில், சீதி பாத்' (நேர்மையான அணுகுமுறை) என்ற எங்கள் அடிப்படை நம்பிக்கையுடன், ஐ.ஐ.எப்.எல். பைனான்ஸ் ஒவ்வொரு பரிவர்த்தனையிலும் முழுமையான வெளிப்படைத்தன்மையை கடைப்பிடிக்கிறது. வாடிக்கையாளர்களின் நலனை கருத்தில் கொண்டு எங்கள் அனைத்து செயல்முறைகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் 1,500 நகரங்களில் 2,800-க்கும் மேற்பட்ட கிளைகளுடன், ஐ.ஐ.எப்.எல். பைனான்ஸ் நகரப் பகுதிகளிலும் கிராமப் பகுதிகளிலும் உள்ள வாடிக்கையாளர்களை எளிதில் சென்றடைகிறது. வெளிப்படையான சேவை முறைகள் மற்றும் வாடிக்கையாளர் முன்னுரிமை கொண்ட அணுகுமுறை காரணமாக, 80 லட்சத்திற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை பெற்றுள்ளது என்று கூறினார்.

# நல்ல உறக்கத்திற்கு புதிய தீர்வுகளை தற்போது புதுச்சேரிக்கு வழங்கும் பெப்ஸ் இண்டஸ்ட்ரீஸ்

**காரைக்கால், செப் 16-**
பெப்ஸ் இண்டஸ்ட்ரீஸ், புதுச்சேரி காரைக்காலில் தனது புதிய ஆடம்பர தயாரிப்புகளை அறிமுகப்படுத்தியுள்ளது. பெப்ஸ் இண்டஸ்ட்ரீஸ் பொது மேலாளர் (விற்பனை) எஸ். ராஜேஷ், புதிய பிரத்தியேக விற்பனை நிலையத்தை திறந்து வைத்தார்.நான்கு தயாரிப்பு அணிவரிசைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. பெப்ஸ் கம்ஃபோர்ட், பெப்ஸ் சுப்ரீம், பெப்ஸ் ரெஸ்டோனிக் மெமரி ஃபோம், மற்றும் சுப்பீரியர் ஸ்பிரிங் ரேஞ்ச்.பெப்ஸ் கம்ஃபோர்ட் டாடா ஸ்டீல் உயர் தர எஃகைக் கொண்டு வடிவமைக்கப்பட்டு, நீடித்த உழைப்பையும், சுற்றுச்சூழல் நட்பு அம்சத்தையும் கொண்டது. பெப்ஸ் சுப்ரீம் ஜீரோ டிஸ்டர்பன்ஸ் பாக்கெட் ஸ்பிரிங்ஸ் மூலம் தடையற்ற உறக்கத்தை வழங்குகிறது.பெப்ஸ் ரெஸ்டோனிக் மெமரி ஃபோம், அமெரிக்க ரெஸ்டோனிக் சீரிஸுடன் இணைந்து, சானிபெல் பொன்னெல் மற்றும் ஆர்டென் பாக்கெட்டட் மாடல்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

பெப்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிர்வாக இயக்குநர் ஜி. சங்கர் ராம், இந்த தயாரிப்புகள் நுகர்வோரின் மாறிவரும் தேவைகளை பூர்த்தி செய்வதோடு, உறக்கத் தரத்தில் புதிய தரத்தை உருவாக்கும் என்று குறிப்பிட்டார்.1750 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள புதிய பிரத்தியேக விற்பனை நிலையம், முழுமையான அனுபவ மையமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 20 பிரத்தியேக விற்பனை நிலையங்களைக் கொண்டுள்ள பெப்ஸ், விரைவில் இதனை 25 ஆக உயர்த்தத் திட்டமிட்டுள்ளது.இந்திய முழுவதும் தற்போது 79 பிரத்தியேக விற்பனை நிலையங்களுடன், நிறுவனம் தனது சில்லறை விற்பனையை வலுப்படுத்துகிறது.

கோயம்புத்தூரில் உள்ள 11 ஏக்கர் தொழிற்சாலையில், 40 ஆண்டுகளுக்கும் மேலான நிபுணத்துவத்துடன் உற்பத்தி நடைபெறுகிறது.மார்வெலஸ் மிடில் ஸ்பைன் கார்டு மற்றும் ஜீரோ டிஸ்டர்பன்ஸ் போன்ற பல காப்புரிமை பெற்ற அம்சங்களுடன், பெப்ஸ் மெத்தைகள் தரமான உறக்கத்திற்கான முன்னோடியாக உள்ளன.

# ராயல் என்ஃபீல்டு 2025 மீடியோர் 350 பைக் புதிய ரகங்களை அறிமுகம் செய்தது

**பாண்டிச்சேரி, செப் 16-**
மிட்-சைஸ் க்ரூஸர் பிரிவில் முன்னணி வகைப்படும் ராயல் என்ஃபீல்டு, அதன் மேம்படுத்தப்பட்ட 2025 மீடியோர் 350ரக பைக்குகளை அறிமுகம் செய்துள்ளது. நான்கு வேரியண்ட்கள் — ஃபயர்பால், ஸ்டெல்லர், அரோரா மற்றும் சூப்பர்நோவா — மற்றும் ஏழு புதிய நிறங்களில் வெளியான இப்புது ரகங்கள், மேம்பட்ட அம்சங்களுடன் இந்த பண்டிகைக் காலத்தில் ஒரு புதிய க்ரூஸிங் அனுபவத்தை வழங்குவதாக உருவாக்கப்பட்டுள்ளன. இந்த புதிய மீட்டியார் பைக்கின் ஆரம்ப விலை ரூ. 1,95,762 (ஃபேக்டரி விலை, சென்னை) என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேம்பட்ட எல்இடி ஹெட்லைட்கள், டிரிப்பர் நேவிகேஷன் பாட், யூ.எஸ்.பி டைப்-சி சார்ஜிங் போர்ட், உதவி-மற்றும்-நழுவு கிளட்ச், மற்றும் அஜெஸ் செய்யக்கூடிய லிவர்கள் போன்ற பல புதிய வசதிகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த பைக்குகள், நகரப் பயணங்களுக்கும், நீண்ட நெடுஞ்சாலை பயணங்களுக்கும் ஏற்றவையாக வடிவமைக்கப்பட்டுள்ளன. சூப்பர்நோவா மற்றும் அரோரா வேரியண்ட்கள் மிகவும் சிறப்பான சுற்றுலா கப்பல் அம்சங்களுடன் வந்துள்ளன.மேலும் புது அர்பன் மற்றும் கிராண்ட் டூரர் ஜிஎம்ஏ கிட்டுகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இது குறித்து நிர்வாக இயக்குனர் ஐச்சர் மோட்டார்ஸ் லிமிடெட் மற்றும் தலைமை செயல் அலுவலர், ராயல் என்ஃபீல்டு, பி. கோவிந்தராஜன் கூறுகையில், மீடியோர் 350என்பது ஒரு மோட்டார்பைக் மட்டுமல்ல, பரந்த சாலைகளில் நிதானமான பயணங்களையும், மறக்கமுடியாத அனுபவங்களையும் வழங்கும் ஒரு லைஃப்ஸ்டைல் பைக்காக மாறியுள்ளது. புதிய வேரியண்ட்களும், வண்ணங்களும் இதன் வசீகரத்தை மேலும் உயர்த்தும் என்று கூறினார்.

# நத்தம் பகுதியில் மின்தடை

**நத்தம், செப். 16-**
திண்டுக்கல் மாவட்டம் நத்தம் உப மின்நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் இன்று (16-9-2025) செவ்வாய்கிழமை நடைபெற உள்ளது.

இதையொட்டி இன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நத்தம்,கோவில்பட்டி, செல்லப்பநாயக்கன்பட்டி, பொய்யாம்பட்டி, மூங்கில்பட்டி, ஊராளிபட்டி, சேத்தூர், அரவங்குறிச்சி, சமுத்திராப்பட்டி, கோட்டையூர், சிறுகுடி, பூசாரிபட்டி, பூதகுடி, பன்னியாமலை, உலுப்பகுடி, காட்டுவேலம்பட்டி, ஆவிச்சிபட்டி, தேத்தாம்பட்டி, மற்றும் ஒடுகம்பட்டி ஆகிய பகுதிகளில் மின்சாரம் வினியோகம் தடை செய்யப்படும்.

இவ்வாறு நத்தம் மின்வாரிய உதவி செயற்பொறியாளர் புண்ணியராகவன் தகவல் தெரிவித்துள்ளார்.

# நத்தத்தில் அ.தி.மு.க. சார்பாக அண்ணா பிறந்தநாள் விழா



**நத்தம், செப். 16-**
திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் பஸ் நிலையம் முன்பாக அ.தி.மு.க. சார்பாக அண்ணா பிறந்தநாள் விழா கொண்டாடபட்டது. இதற்கு கழக ஜெயலலிதா பேரவை இணை செயலாளர் கண்ணன் தலைமை தாங்கி அண்ணாவின் உருவப்படத்திற்கு மாலைகள் அணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து இனிப்புகள் வழங்கப்பட்டது.

இதில் அ.தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள் ராமராசு, மணிகண்டன், சின்னு,மாவட்ட ஜெயலலிதா பேரவை இணை செயலாளர் ஜெயபாலன்,அவைத் தலைவர்கள் பிறவிக்கவுண்டர் சேக்ஒலி, மாவட்ட மாணவரணி இணை செயலாளர் அசாருதீன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் சின்னாக்கவுண்டர், முன்னாள் ஊராட்சி தலைவர் ஆண்டிச்சாமி, தெற்கு ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் மூங்கில்பட்டி கண்ணன் உள்ளிட்ட அ.தி.மு.க. ஒன்றிய, நகர கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# எடப்பாடியாரின் எழுச்சிப் பயணம் வெற்றிப்பயணமாக அமைந்துள்ளது:முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பேச்சு



**திருமங்கலம், செப். 16-**
அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடியாரின் எழுச்சிப் பயணம் வெற்றிப் பயணமாக அமைந்துள்ளதாக திருமங்கலத்தில் நடைபெற்ற அண்ணா தொழிற்சங்கத்தின் 51-வது ஆண்டு துவக்க விழாவில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பேசினார்.

அ.தி.மு.க அண்ணா தொழிற்சங்கத்தின் 51வது ஆண்டு துவக்க விழா மற்றும் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக மதுரை மண்டலம்,திருமங்கலம் கிளையில் நேற்று சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு மண்டல செயலாளர் உசிலை ராஜாங்கம் தலைமை வகித்தார்.திருமங்கலம் நகரச் செயலாளர் ஜே.டி.விஜயன்,ஒன்றிய செயலாளர் அன்பழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மாவட்ட அண்ணா தொழிற்சங்க செயலாளர் வக்கீல் பாஸ்கரன் வரவேற்றார்.ஏராளமான அண்ணா தொழிற்சங்க போக்குவரத்து தொழிலாளர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வினில் முன்னாள் அமைச்சர்,சட்டமன்ற எதிர்கட்சி துணைத்தலைவர் ஆர்.பி.உதயகுமார் கலந்து கொண்டு பேரறிஞர் அண்ணாவின் படத்திற்கு மலர்களை தூவி மரியாதை செய்து அண்ணா தொழிற்சங்க 51வது ஆண்டு விழாவினை முன்னிட்டு அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது:-
கடந்த தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகளை தி.மு.க நிறைவேற்றவில்லை.10 முதல் 15 சதவீதம் வாக்குறுதிகள் மட்டுமே நிறைவேற்றப்பட்டு உள்ளது.தி.மு.க ஆட்சியில் தமிழகம் தலை குனிந்த நிலையில் உள்ளது.

கழக பொதுச்செயலாளர் எடப்பாடியாரின் எழுச்சிப் பயணம் வெற்றிப் பயணமாக அமைந்துள்ளது.2026 தேர்தலில் அ.தி.மு.க அமோக வெற்றி பெற்று எடப்பாடியார் முதலமைச்சராக பதவியேற்பது நிச்சயம் என்று பேசினார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏக்கள் தமிழரசன்,மாணிக்கம்,மாநில எம்.ஜி.ஆர் மன்ற இணைச் செயலாளர் புளியங்குளம் ராமகிருஷ்ணன்,மாவட்ட கழக பொருளாளர் வக்கீல் திருப்பதி,மாவட்ட சார்புஅணி நிர்வாகிகள் சிங்கராஜ் பாண்டியன்,துரைப்பாண்டி,சரவண பாண்டி,முன்னாள் நகர்மன்ற துணைத் தலைவர் சதீஷ்ண சண்முகம்,அண்ணா தொழிற்சங்க மாவட்ட இணைச் செயலாளர்கள் ராதாகிருஷ்ணன், தவமணி, திருமங்கலம் கிளை தலைவர் வெற்றிச் செல்வன், செயலாளர் கல்யாணி,பொருளாளர் குருவெங்கட்ராஜ் மற்றும் நிர்வாகிகள் கணேஷ்குமார், பாலகுரு, ராமராஜன், ராஜகுமாரன் மற்றும் ஜெயராஜ்,ராமகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சேவுகம்பட்டி பேரூராட்சியில் வார்டு சபை கூட்டம்



**வத்தலகுண்டு, செப். 16-**
திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு ஒன்றியம் சேவுகம்பட்டி பேரூராட்சியில் நடைபெற்ற வார்டு சபை கூட்டத்திற்கு பேரூராட்சி தலைவர் வனிதா தங்கராஜன் தலைமை தாங்கினார் துணைத்தலைவர் தெய்வ ராணி விஜயன் முன்னிலை வகித்தார். செயல் அலுவலர் ரமேஷ்பாபு கூட்டத்தின் நோக்கம் குறித்து பொதுமக்களிடம் விளக்கி கூறினார். இந்த கூட்டத்தில் பொதுமக்கள் தங்களது வார்டு பகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள் மற்றும் கோரிக்கைகளை முன்வைத்தனர். இது குறித்து பரிசீலனை செய்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு விரைவில் சரிசெய்யப்படும் என தெரிவிக்கப்பட்டது.பேரூராட்சிஅனைத்துகவுன்சிலர்கள் பேரூராட்சி பணியாளர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் தேசிய வாக்காளரதினத்தை முன்னிட்டு வாக்காளர் உறுதி மொழி எடுத்துக்கொள்ளப்பட்டது. கூட்டம் முடிவில் பேரூராட்சியில் இளநிலை உதவியாளர் அம்மமுத்து நன்றி கூறினார்.

# ஒட்டன்சத்திரத்தில் அண்ணா பிறந்தநாள் விழா



**ஒட்டன்சத்திரம், செப். 16-**
திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகர திமுக சார்பில் அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா நகரச் செயலாளர் வெள்ளைச்சாமி தலைமையில் நடைபெற்றது.

அண்ணை பிறந்த நாள் விழாவில் திண்டுக்கல் மாவட்ட அவைத் தலைவர் மோகன், ஒட்டன்சத்திரம் தொகுதி பார்வையாளர் பரணி. கே.மணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கண்ணன், நகர அவைத் தலைவர் சோமசுந்தரம், நகர் மன்ற தலைவர் திருமலைசாமி, மத்திய ஒன்றிய செயலாளர் எஸ். ஆர்.கே .பாலு, மத்திய ஒன்றிய துணைச் செயலாளர் முருகானந்தம், நகரப் பொருளாளர் சதானந்தம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாண்டியராஜன் உள்ளிட்ட நகர மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, வார்டு செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



**மதுரை தெற்கு தொகுதி முன்னாள் எம்.எல்.ஏ. எஸ்.எஸ்.சரவணனின் பிறந்த நாளை முன்னிட்டு முதியோர் இல்லத்தில் அன்னதானம் வழங்கினார். இதில் ராமமூர்த்தி, வில்லாபுரம் செல்வம், நந்தா, கார்மேகம்,செல்வகுமார், ஜெயக்குமார், பால்பாண்டி, மௌலானா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.**

# கமுதியில் அண்ணா பிறந்தநாள் விழா: காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. தலைமையில் தி.மு.க.வினர் மரியாதை



**கமுதி, செப். 16-**

ராமநாதபுரம் மாவட்டம், கமுதியில் பேரறிஞர் அண்ணா 117-வது பிறந்த நாள் விழா நேற்று பேருந்து நிலையம் முன்பு அவரது திருவுருவப்படத்திற்கு தி.மு.க. மாவட்ட செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. தலைமையில் ஏராளமான தி.மு.க. வினர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

பின்னர் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம் என உறுதிமொழி ஏற்றனர். தி.மு.க. வடக்கு ஒன்றியம் மற்றும் கமுதி பேரூர் கழகம் சார்பில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு, வடக்கு ஒன்றிய செயலாளர் வாசுதேவன், பேரூர் கழகச் செயலாளர் பால முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் அவைத் தலைவர்கள் ராஜேந்திரன், லட்சுமணன், ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் தமிழ்ச்செல்வி போஸ், துணைத் தலைவர் அய்யனார், மாவட்ட பிரதிநிதிகள் பாரதி தாசன், காசிலிங்கம், நந்தகோபால், சேசுராஜ், ஊராட்சி மன்ற தலைவர்கள் காவடி முருகன், பழனி, ராஜசேகர், கண்ணன், அழகர்சாமி, மாரி முத்து அறங்காவலர் முருகன், பித்தா என்ற ராஜேந்திர பிரசாத், நூர்தீன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சிரஞ்சீவி, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர் செய்யது கரிமுல்லா, ஒன்றிய தொண்டரணி அமைப்பாளர் வலம்புரி உட்பட 500 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இதே போல் கமுதி அருகே கீழராமநதி கிராமத்தில் நடைபெற்ற அண்ணா பிறந்தநாள் விழாவில், வடக்கு ஒன்றிய செயலாளர் வாசுதேவன் தலைமையில், மாவட்ட பிரதிநிதி பாரதிதாசன், ஊராட்சி மன்ற தலைவர் அழகர்சாமி, கிளைச் செயலாளர் நாகூர்பிச்சை, ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஜெயகார்த்திக், மாணவரணி அமைப்பாளர் சுரேஷ், மற்றும் முத்துமாரி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## சிம்புள் ஒன் ஜென் 1.5, ஒன் எஸ் ஸ்கூட்டர்கள் இப்போது ஈரோட்டில் கிடைக்கும்

**ஈரோடு, செப். 16-**

பெங்களூருவைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு தானுந்து நிறுவனமான சிம்புள் எனர்ஜி, ஈரோட்டில் அதன் புதிய அங்காடியைத் தொடங்கியுள்ளது. 1,100 சதுர அடி பரப்பளவில் அமைந்த இந்த அங்காடி, CROWN AGENCIES நிறுவனத்துடன் இணைந்து தொடங்கப்பட்டுள்ளது. நவீன வடிவமைப்பில் உருவாக்கப்பட்ட இந்த அங்காடி, வாடிக்கையாளர்களுக்கு முழுமையான வணிக அனுபவத்தை வழங்குகிறது. இது சிம்புள் ஒன் ஜென் 1.5, சிம்புள் ஒன் எஸ் மற்றும் பாகங்கள் உட்பட சிம்புள் எனர்ஜியின் முழு தயாரிப்பு வரிசையையும் காட்சிப்படுத்துகிறது. நிறுவனத்தின் விரிவாக்க மூலோபாயத்தின் ஒரு பகுதியாக, 1,347 சதுர அடி பரப்பளவில் முழு வசதிகளும் கொண்ட ஒரு சேவை மையமும் இந்த அங்காடியுடன் சேர்த்து தொடங்கப்பட்டுள்ளது.

தற்போது, சிம்புள் எனர்ஜி பெங்களூரு, கோவா, விஜயவாடா, ஹைதராபாத், விசாகப்பட்டினம் மற்றும் கொச்சி உள்ளிட்ட நகரங்களில் 47 விற்பனைக் கூடங்களை இயக்கி வருகிறது. தமிழ்நாட்டில் அதிக கவனம் செலுத்தி, நிறுவனம் தனது சில்லறை வணிக வலையமைப்பை தீவிரமாக விரிவுபடுத்தி வருகிறது. வரும் வாரங்களில், சென்னை, திருச்சி மற்றும் பாண்டிச்சேரியில் புதிய கடைகள் திறக்கப்பட உள்ளன. நிறுவனம் அகில இந்திய விரிவாக்கத்தை விரைவாக முன்னெடுத்து வருகிறது. வரும் மாதங்களில், சிம்புள் எனர்ஜி டெல்லி, போபால், பட்னா, ராஞ்சி மற்றும் புவனேஸ்வர் ஆகிய நகரங்களில் விரிவடைய திட்டமிட்டுள்ளது.

சிம்புள் ஒன் ஜென் 1.5 ஸ்கூட்டர் ₹1,71,944 (எக்ஸ்-ஷோரூம், ஈரோடு) மற்றும் சிம்புள் ஒன் எஸ் ஸ்கூட்டர் ₹1,39,999 (எக்ஸ்-ஷோரூம், ஈரோடு) எனும் விலையில் விற்பனைக்கு உள்ளது. வாடிக்கையாளர்கள் ஸ்கூட்டரை சோதனை ஓட்டிக்காண, பாகங்களைப் பார்வையிட அல்லது முன்பதிவு செய்ய இந்த அங்காடிக்கு வரலாம். சோதனை ஓட்டம் மற்றும் முன்பதிவு சேவைகள் https://www.simpleenergy.in/ இணையதளத்தின் மூலமாகவும் இலக்காக்கப்பட்டுள்ளன.

ஈரோட்டில் உள்ள சிம்புள் எனர்ஜி அங்காடியின் முகவரி: எண்: 165, பெருந்துறை சாலை, பரிமளம் பிரிட்ஜ்ஸ்டோன்-டயர் அருகில், பழையபாளையம், ஈரோடு, தமிழ்நாடு-638011 இல் அமைந்துள்ளது.

## அமேசான் கிரேட் இந்தியன் பெஸ்டிவல் 2025 ‘எர்லி டீல்கள்’

**மதுரை, செப். 16-**

அமேசான் கிரேட் இந்தியன் ஃபெஸ்டிவல் 2025-க்கு முன்னதாக அமேசான்.இன் இன்று ‘எர்லி டீல்ஸை’-ஐ வெளியிட்டது, இது வாடிக்கையாளர்களுக்கு செப்டம்பர் 13-ஆம் தேதி தொடங்கும் பண்டிகைக்கு முந்தைய சலுகைகளை வழங்குகிறது. முக்கிய விழா செப்டம்பர் 23-ஆம் தேதி தொடங்குகிறது, பிரைம் உறுப்பினர்கள் பிரத்யேக 24-மணிநேர முன்கூட்டியே அணுகலை அனுபவிக்கிறார்கள். இந்த ஆண்டு ஷாப்பிங் திருவிழா விரிவாக்கப்பட்ட டெலிவரி நெட்வொர்க்குகள், AI- இயங்கும் ஷாப்பிங் கருவிகள் மற்றும் பண்டிகை கொண்டாட்டங்களை நிறைவு செய்யும் பிரத்யேக பொழுதுபோக்கு விருப்பங்கள் மூலம் மேம்பட்ட ஷாப்பிங் அனுபவங்களைக் கொண்டுவருகிறது. பிரைம் உறுப்பினர்கள் முழு கிரேட் இந்தியன் ஃபெஸ்டிவல் முழுவதும் விதிவிலக்கான மதிப்பை அனுபவிப்பார்கள். 24-மணிநேர முன்கூட்டியே அணுகல் நன்மையைத் தாண்டி, பிரைம் உறுப்பினர்கள் பிரத்யேக “பிரைம் தமக்கா சலுகைகளை” - சிறப்பு மின்னல் ஒப்பந்தங்கள் மற்றும் பண்டிகை காலம் முழுவதும் கிடைக்கும் பிரைம்-மட்டும் சலுகைகளைத் திறக்கலாம்.

அமேசான் இன்ஃப்ளூயன்சர் திட்டத்தின் மூலம் வாங்கக்கூடிய உள்ளடக்கம் மூலம் சலுகைகளைக் காண்பிக்க, சமீரா ரெட்டி, ராஜீவ் மக்னி மற்றும் ரன்வீர் பிரார் உள்ளிட்ட 1 லட்சத்திற்கும் மேற்பட்ட படைப்பாளர்களை அமேசான் ஈடுபடுத்தும். இந்த முயற்சி எலிவேட், ஃபேஷன், ஹோம் மற்றும் 3,000க்கும் மேற்பட்ட படைப்பாளர்களைக் கொண்ட புதிய டெக் இன்ஃப்ளூயன்சர் திட்டம் போன்ற சிறப்புத் திட்டங்களை உள்ளடக்கியது.

ஃபேஷன் மற்றும் அழகு ஆர்வலர்கள் சிறந்த பிராண்டுகளில் 50-80% வரை தள்ளுபடி பெறுவார்கள். வாடிக்கையாளர்கள் கூடுதல் 10% கேஷ்பேக் மற்றும் சிறப்பு காலக்கெடு சலுகைகளை இரவு 8 மணி சலுகைகள் (இரவு 8 மணி - காலை 12 மணி) மற்றும் எக்ஸ்பிரஸ் சலுகைகள் (காலை 12 மணி - காலை 5 மணி) உடன் அனுபவிக்கலாம்.

Printed Published and Owned
by S.Manimaran,
Printed at Manimaran
Printers at 9, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 / 94

## ஈரோட்டில் ஜோஸ் ஆலுக்காஸ் நடத்தும் சிறப்பு ஆபரண கண்காட்சி

**ஈரோடு, செப். 16-**

ஜோஸ் ஆலுக்காஸ், ஈரோடு மாநகரில் ஆர்.கே.வி.சாலையில் அமைந்துள்ள அதன் ஷோரூமில் ஆபரண கண்காட்சி நிகழ்வை தொடங்கியிருக்கிறது. இந்த ஆபரண கண்காட்சி, செப்டம்பர் 13-ம் தேதியிலிருந்து, அக்டோபர் 5-ம் தேதி வரை நடத்தப்படுகிறது. ஜோஸ் ஆலுக்காஸ் குழுமத்தின் நிர்வாக இயக்குனர் பால் ஜே.ஆலுக்காஸ் கூறுகையில், ஈரோடு மாநகரில் நடைபெறும் இக்கண்காட்சி, மிக நேர்த்தியான நகை வடிவமைப்புத் திறன் மற்றும் காலத்தைக் கடந்து நிலைத்து நிற்கும் அழகியல் அம்சங்களின் ஒருங்கிணைந்த கொண்டாட்டமாகும். எமது பெருமதிப்பிற்குரிய வாடிக்கையாளர்களால் இதற்கு முன்பு வரை ஒருபோதும் காணப்படாத அற்புதமான கலைப் படைப்புகளான ஆபரணங்களின் தொகுப்பை இக்கண்காட்சியில் காட்சிப்படுத்துவதில் நாங்கள் பெரும் உற்சாகம் கொள்கிறோம். ஜோஸ் ஆலுக்காஸ்-ல் பாரம்பரியத்தை புத்தாக்கத்தோடு நேர்த்தியாக கலந்து ஆபரணங்களில் அழகான கலைப்படைப்புகளை உருவாக்குவதில் நாங்கள் பெருமை கொள்கிறோம் என்று கூறினார்.

ஈரோடு மாநகரில் நடைபெறும் இந்த முத்திரைப்பதித்த ஆபரண கண்காட்சி என்பது, ஒரு நகை கண்காட்சி என்பதையும் கடந்ததாகும். இக்கண்காட்சி நிகழ்வின்போது வாங்கும் ஒவ்வொரு நகை மீதும் சேதாரக் கட்டணம் மீது 30 சதவீதம் தள்ளுபடி வரை பிரத்யேக சிறப்பு சலுகைகளை வாடிக்கையாளர்கள் பெற்று மகிழலாம். பழைய தங்க நகைகளை கொடுத்துவிட்டு, சான்றளிக்கப்பட்ட பிஸ் ஈரப்பதம் ஹால்மார்க் குறியீடு கொண்ட புதிய ஆபரணங்களை வாங்கலாம். பழைய தங்க ஆபரணங்களை மாற்றி, புதிய ஆபரணங்களை வாங்கிக்கொள்ளும் திட்டத்திற்கு சிறப்பு தள்ளுபடிகளும் வழங்கப்படுகின்றன. தரம், புத்தாக்கம் மற்றும் நம்பிக்கையின் நிகரற்ற கலவையின் வழியாக நேர்த்தியான ஆபரண தயாரிப்பிலும், விற்பனையிலும் தர அளவுகோலை ஜோஸ் ஆலுக்காஸ் தொடர்ந்து உயர்த்தி வருகிறது.

பென்னிகுக் பிறந்தநாளை முன்னிட்டு

# பொறியாளர்கள் தினமாக அரசு அறிவிக்க வேண்டும்

சிவில் இன்ஜினியர் வெல்பார் அசோசியேசன் தீர்மானம்



**வத்தலகுண்டு, செப். 16-**

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை சிவில் இன்ஜினியர் வெல்பர் அசோசியேஷன் கூட்டம் தனியார் மன்றத்தில் நடைபெற்றது. இதன் தலைவர் திருப்பதி தலைமை வகித்தார். அருணகிரி அனைவரையும் வரவேற்றார். பொறியாளரும் வாஸ்து நிபுணருமான செல்லப் பாண்டியன்விளக்க உரையாற்றினார்

கூட்டத்தில் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது தலைவராக திருப்பதி செயலாளர் துரைப்பாண்டி பொருளாளர் மகேஸ்வரன் மற்றும் நிர்வாகிகள் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்கள். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. பொறியாளர்கள் கொடுக்கும் சுய சான்று கட்டிட வரைபட அனுமதிகளுக்கு ஊரக உள்ளாட்சி நிர்வாக அதிகாரிகள் தொடர்ந்து அலட்சியப் போக்குடன் செயல்படுவதினால் இச்சங்கம் கண்டிக்கிறது.

பென்னிகுக் பிறந்தநாளை பொறியாளர்கள் தினமாக தமிழக அரசு அறிவிக்க வேண்டும். எம் சாண்ட் விலையினை அரசு உடனே குறைக்க வேண்டும். வரும் தேர்தலை முன்னிட்டு கட்டிட கட்டுமான பொருட்களின் விலைகளை உயர்த்த கூடாது. பொறியாளர்களுக்கு நல வாரியம் அமைக்க வேண்டும் உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. செந்தில்குமார் கூட்டத்தினை ஒருங்கிணைத்தார். கூட்டத்தின் முடிவில் துரைப்பாண்டியன் நன்றி கூறினார்.

## பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா: பெரியபுள்ளான் எம்.எல்.ஏ மரியாதை



**மேலூர், செப். 16-**

பேரறிஞர் அண்ணாவின் 117-வது பிறந்த நாள் விழாவை யொட்டி அழகர்கோவில் கோட்டைவாசல் முன்பு உள்ள அண்ணாவின் திருவுருவ சிலைக்கு மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட இளைஞர் இளம்பெண்கள் பாசறை செயலாளரும், மேலூர் சட்டமன்ற உறுப்பினருமான பி.பெரியபுள்ளான் என்ற செல்வம் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

உடன் கிடாரிப்பட்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சுரேஷ், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ஏ.கே.வெள்ளைச்சாமி, மாவட்ட ஐடிவிங் துணைதலைவர் அரவிந்த், அழகர்கோவில் கிளைகழக செயலாளர்கள் மருதுபாண்டி, ஆயத்தம்பட்டி செல்லம், வலையபட்டி ஊராட்சி செயலாளர் அடைக்கன், பிரதிநிதிகள் தனிகொடி, தன்ராஜ், சி.அழகன், அய்யாவு, பெரியசாமி நாட்டாமை, சின்னன், அ. வலையபட்டி முன்னாள் துணை தலைவர் பூசாரி அழகன், மற்றும் ஏ.அடைக்கன், சுந்தர், தனராஜ், சின்னதம்பி உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## நத்தத்தில் தி.மு.க. சார்பில் அண்ணா பிறந்தநாள் விழா



**நத்தம், செப். 16-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் பஸ் நிலையம் ரவுண்டானா முன்பாக தி.மு.க. சார்பாக அண்ணா பிறந்தநாள் விழா கொண்டாடபட்டது. இதற்கு முன்னாள் எம்.எல்.ஏ ஆண்டி அம்பலம் தலைமை தாங்கினார். நகர செயலாளர் ராஜ்மோகன், ஒன்றிய செயலாளர்கள் ரத்தினக்குமார், சேக்சிக்கந்தர் பாட்சா, பழனிச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொடர்ந்து அண்ணாவின் உருவப் படத்திற்கு மாலைகள் அணிவிக்கபட்டு மரியாதை செலுத்தப்பட்டு பின்னர் இனிப்புகள் வழங்கப்பட்டது.

தொடர்ந்து உறுதிமொழி எடுக்கபட்டது.இதில் மாநில பொதுக்குழு உறுப்பினர் முத்துகுமார்சாமி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுந்தரமூர்த்தி,மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் இப்ரில் ஆசித்,,மாவட்ட சுற்றுச்சூழல் அணி தலைவர் ராஜகோபால், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் சிவா உள்ளிட்ட தி.மு.க. கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பட்டிவீரன்பட்டி பேரூராட்சியில்

## வார்டு சபை கூட்டத்தில் பொதுமக்கள் பங்கேற்பு

**வத்தலகுண்டு, செப். 16-**

திண்டுக்கல் மாவட்டம் பட்டிவீரன்பட்டி பேரூராட்சியில் நடைபெற்ற வார்டு சபை கூட்டத்திற்கு பேரூராட்சி துணைத் தலைவர் கல்பனாதேவி அருண்குமார் தலைமை தாங்கினார். செயல் அலுவலர் கோபிநாத் கூட்டத்தின் நோக்கம் குறித்து பொதுமக்களிடம் விரிவாக விளக்கி கூறினார். இந்த கூட்டத்தில் பொதுமக்கள் தங்களது வார்டு பகுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள் மற்றும் கோரிக்கைகளை முன் வைத்தனர்.

இது குறித்து பரிசீலனை செய்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு விரைவில் சரிசெய்யப்படும் என தெரிவிக்கப்பட்டது. தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு கலந்து கொண்ட அனைவரும் உருது மொழி எடுத்துக் கொண்டார்கள். பட்டிவீரன்பட்டி பேரூராட்சி அனைத்து கவுன்சிலர்கள். பொதுமக்கள். தூய்மை பணியாளர்கள். தன்னார்வலர்கள் திரளாக கலந்து கொண்டார்கள்.



திண்டுக்கல்லில் பேரறிஞர் அண்ணாவின் 117-வது பிறந்தநாள் முன்னிட்டு அவரது சிலைக்கு அ.தி.மு.க. அமைப்பு செயலாளர் மருதராஜ், மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் சி.எஸ்.ராஜமோகன் தலைமையில் நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் ஒன்றிய செயலாளர் ராஜசேகர், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் பாரதி முருகன், பகுதி செயலாளர்கள் சுப்பிரமணி, மோகன், சேசு,வி.டி.ராஜன், முரளி, இக்பால், பொதுக்குழு உறுப்பினர் நெப்போலியன், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு செயலாளர் ஜெயபாலன், மாவட்ட தொழிற்சங்க செயலாளர் ஜெயராமன், மாவட்ட மருத்துவர் அணி செயலாளர் ராஜசேகர், மாவட்ட ஓட்டுனர் அணி செயலாளர் பிரபு ராம், மாவட்ட கலைப்பிரிவு செயலாளர் ரவிக்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

# ஏழாவது முறையாக தி.மு.க. ஆட்சி அமைப்பது உறுதி: அமைச்சர் பேட்டி

**ஒட்டன்சத்திரம், செப். 16-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது, தமிழகத்துக்கு ஒன்றிய அரசு இளைக்கும் துரோகங்களை எதிர்த்து குரல் கொடுக்கிற ஒரே தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் தான், யார் வேண்டுமானாலும் இயக்கம் ஆரம்பிக்கலாம், கடந்த நான்காண்டுகளாக தி.மு.க. என்னென்ன சாதனைகள் செய்துள்ளது என்று பொதுமக்களுக்கு எடுத்துக் கூறியுள்ளோம். அதன் மூலம் பயனடைந்த மக்கள் அரசு மீது மிகுந்த நம்பிக்கையில் உள்ளனர். சொன்ன வாக்குறுதிகள் மட்டுமல்லாமல், சொல்லாத வாக்குறுதியும் தி.மு.க நிறைவேற்றியுள்ளது. மக்கள் எங்கள் பக்கம் உள்ளனர். தி.மு.க. ஏழாவது முறையாக ஆட்சி அமைப்பது உறுதி. தமிழ்நாடு முதலமைச்சர் இரண்டாவது முறையாக முதலமைச்சராக பதவி ஏற்பதும் உறுதி. தமிழ்நாட்டின் மண், மொழி, மற்றும் மானத்தின் மீது தொடர் தாக்குதல் இதற்காக தமிழ்நாடு முதல்வர் தமிழ்நாடு மக்களை ஒன்றிணைக்கும் முயற்சியாக ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தை முன்னெடுப்பு செய்துள்ளார்.

இந்தப் பணியினை வெற்றிகரமாக முடித்துள்ளோம், திண்டுக்கல் மாவட்டத்தில் ஒட்டன்சத்திரம், வேடசந்தூர், நத்தம், உள்ளிட்ட பகுதிகளில் 1,91,268 குடும்பங்களை சேர்த்து சாதித்து உள்ளோம், இந்தியா கூட்டணி வெற்றி பெற்றிருந்தால் நீட் தேர்வு ரத்து செய்யப் பட்டிருக்கும். என்று கூறினார்

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
ஒப்பந்த முறை : மொத்தத் தொகை

குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.39/TVM-CLE/2025-2026/Dated. 15.09.2025.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும், திருவண்ணாமலை பொதுப்பணித்துறை கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்ட கண்காணிப்புப் பொறியாளர் அவர்களால் அட்டவணையில் காணும் பணிக்கு 26.09.2025 அன்று இறுதி நாளாக கொண்டு இணையதள நேரப்படி பிற்பகல் 3.00 மணி வரையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள், தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறையில் பதிவு செய்துள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. https://tntenders.gov.in என்ற இணையதளத்தின் மூலமாக ஒப்பந்தப்புள்ளி படிவங்களை [illegible]

| வ.எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு (ரூபாய் இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை (ரூபாயில்) | பணி முடிக்க வேண்டிய காலம் |
| --- | --- | --- | --- | --- |
| 1 | கள்ளக்குறிச்சி மாவட்டம் [illegible] | 398.80 | 2,09,500 /- | 8 மாதங்கள் |

[illegible]
https://tntenders.gov.in

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், திருவண்ணாமலை-4.

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within three months there after. I, VARATHAN.K, S/o. KRISHNAN.T aged 22, permanently residing at No.2/1092, Melmaruvathur nagar, Chinnavadakarai, Veeraragavan street, Thirumangalam Taluk, Madurai District-625706 intend having my enrolment as an Advocate moved before the Bar Council of Tamilnadu, Bar Council Buildings, High Court Campus, Chennai-104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

VARATHAN.K

---

முதன்மை அமர்வு நீதிமன்றம் - மாவட்ட நீதிமன்றம், தேனி
G.W.O.P.No. 34/2025
IN THE MATTER OF: Minor Selvi L. Sashwathaa
டாக்டர். ஆர். லட்சுமி ஆனந்தன் -மனுதாரர்-
- எதிர்ண -
டாக்டர். எல். கவிதா -எதிர்மனுதாரர்-

அறிவிப்பு

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சிறுமி செல்வி எல். சஸ்வதாவின் கல்வி, சுகாதாரம் மற்றும் நலனுக்காக, அவளுக்குச் சொந்தமான நிலங்களை விற்பனை செய்ய நீதிமன்ற அனுமதி பெறுவதற்காக, மனுதாரர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். இதன் மூலம் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுவது: இந்த மனுவிற்கு எதிராக யாருக்காவது ஏதேனும் எதிர்ப்பு இருந்தால், அவர்கள் 19.09.2025 காலை 10.30 மணிக்குள் நேரில் அல்லது வழக்கறிஞர் மூலமாக, தேனி மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜராகி தங்கள் எதிர்ப்புகளைச் சமர்ப்பிக்கலாம். குறிப்பிட்ட காலத்திற்குள் எந்த எதிர்ப்பும் வராத பட்சத்தில், வழக்கு சட்டப்படி தீர்மானிக்கப்படும்.

பாண்டியராஜ்
ஸ்ரீ சிவநாத்
வழக்கறிஞர்கள்,
போடிநாயக்கனூர்

---

மாண்புமிகு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் திருமங்கலம்.
ந.க.எண்.1433/2025/B2
S.பழனிசாமி, த/பெ.K.சுந்தரதேவர்
6/39,ஏழுசாமி கோவில் தெரு
பொன்னமங்கலம் கிராமம்
திருமங்கலம் வட்டம்
மதுரை மாவட்டம்.
------ மனுதாரர்
— எதிர் —
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் திருமங்கலம், மதுரை மாவட்டம்.
------ எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரராகிய நான்,எனது தந்தை சுந்தரதேவர், த/பெ. வேட்காத்தணதேவன் என்பவர் கடந்த 08.10.2010-ம் தேதி மதுரை மாவட்டம்,திருமங்கலம் வட்டம்,பொன்னமங்கலம் கிராமத்தில் உள்ள வீட்டில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருமங்கலம் முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30தினங்களுக்குள் காலை 11.00மணிக்கு மேற்படி கனம் திருமங்கலம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.

மனுதாரர்
S.பழனிசாமி
பொன்னமங்கலம் கிராமம்.

---

மாண்புமிகு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் உத்தமபாளையம்.
ந.க.எண்: 1916 / 2024 / அ1
திரு.முருகேசன்,
த.பெ, கருப்பையா,
நேருஜி தெரு, சில்லமரத்துப்பட்டி.
போடிநாயக்கனூர் வட்டம்
- மனுதாரர் -
-எதிர்-
உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்,
போடிநாயக்கனூர்.
-எதிர்மனுதாரர் -

அறிவிப்பு

மேற்படி மனுவின், மனுதாரரின் தாயார் திருமதி. பொன்னுத்தாய் என்பவர் கடந்த 10.05.2011-ம் தேதியன்று சில்லமரத்துப்பட்டி கிராமத்தில் இறந்ததை, மேற்படி எதிர்மனுதார் அலுவலகத்திலுள்ள இறப்பு பதிவேட்டில் பதிய உத்தரவிட வேண்டி மனுதாரர் மனுத்தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு மீது விசாரணை நடைபெற உள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் மாண்புமிகு உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் முன்பாக ஆஜராகி தெரிவிக்கலாம், தவறினால் மனுவானது ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

முருகேசன்
மனுதாரர்.

---

மாண்புமிகு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் உத்தமபாளையம்.
ந.க.எண்: 1915 / 2024 / அ1
திரு.முருகேசன்
த.பெ, கருப்பையா,
நேருஜி தெரு,
சில்லமரத்துப்பட்டி.
போடிநாயக்கனூர் வட்டம்
- மனுதாரர் -
-எதிர்-
உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்,
போடிநாயக்கனூர்.
-எதிர்மனுதாரர் -

அறிவிப்பு

மேற்படி மனுவின், மனுதாரரின் தகப்பனார் திரு.கருப்பையா என்பவர் கடந்த 14.09.1976-ம் தேதியன்று சில்லமரத்துப்பட்டி கிராமத்தில் இறந்ததை, மேற்படி எதிர்மனுதார் அலுவலகத்திலுள்ள இறப்பு பதிவேட்டில் பதிய உத்தரவிட வேண்டி மனுதாரர் மனுத்தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு மீது விசாரணை நடைபெற உள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் மாண்புமிகு உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் முன்பாக ஆஜராகி தெரிவிக்கலாம், தவறினால் மனுவானது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

முருகேசன்
மனுதாரர்.

---

உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்/ சார் ஆட்டசியர் அலுவலகம் பரமக்குடி.
ந.க.பி6.5538/2025.
ராமமூர்த்தி, த/பெ. துரைராஜ்,
333, 10-வது தளம்,
ஹவுசிங் யூனிட்,
கவுண்டம்பாளையம்,
கோயம்புத்தூர் வடக்கு,
கோயம்புத்தூர் 641030.

அறிவிப்பு

மேற்படி முகவரியில் வசிக்கும் மனுதாரர் ஆகிய நான் எனது தந்தை துரைராஜ் த/பெ. கருப்பையா என்பவர் கடந்த 25 .12.2008 -அன்று வடக்குத்தெரு கோபால பட்டினம் ராதாபுளிகுரூப்,பரமக்குடி வட்டம். என்ற முகவரியில் இறந்ததை பதிவுசெய்யக்கோரி இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன் . என்னுடைய தந்தை இறந்ததை அறியாமையின் காரணமாக பதிவு செய்ய தவறி விட்டேன் மேற்படி விசாரணைக்கான வாய்தா எதிர்வரும் 08.10.2025 அன்று பரமக்குடி சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. இதில் யாருக்கும் ஆட்சேபனை இருப்பின் அறிவிப்பு வெளியான 15 தினங்களுக்குள் காலை 10 மணிக்கு மேற்படி நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.

ராமமூர்த்தி,
மனுதாரர்

---

மாண்புமிகு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம். திருமங்கலம்.
ந.க.எண்.2049/2025/அ2
தனம், க/பெ.பால்பாண்டி
2//23,பாண்டியன் நகர்
சின்னவடகரை கிராமம்
திருமங்கலம் வட்டம்
மதுரை மாவட்டம்.
------- மனுதாரர்
— எதிர் —
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் திருமங்கலம், மதுரை மாவட்டம்.
--------------- எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரராகிய நான்,எனது தாயார் முத்தம்மாள், க/பெ.பாலுச்சாமி என்பவர் கடந்த 19.07.2023-ம் தேதி மதுரை மாவட்டம்,திருமங்கலம் வட்டம்,சின்னவடகரை கிராமத்தில் உள்ள வீட்டில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருமங்கலம் முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30தினங்களுக்குள் காலை 11.00மணிக்கு மேற்படி கனம் திருமங்கலம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.

மனுதாரர்
தனம்
சின்னவடகரை கிராமம்.

---

வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் திண்டுக்கல்.
ந. க. எண்.2727/2025/ஆ6
இ.ப. வ.எண்.96/2025/ஆ6
M. முருகேசன், S/o. முத்துச்சாமி ,
32, கோவில் தெரு,
அச்சாம்பட்டி
சில்வார்பட்டி போஸ்ட் ,
அகரம் , திண்டுக்கல் மாவட்டம்.
..மனுதாரர்
எதிர்
வருவாய் கோட்டாச்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் திண்டுக்கல்.
....எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி நிர் மனுதாரரின் தாயார் ஆண்டியம்மாள் கடந்த 24.11.1994ம் தேதி ஷை முகவரியில் இறந்துவிட்டதை திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் வேண்டி மனு தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் பதிவு செய்ய மேற்படி இறப்பு சம்பந்தமாக யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் எதிர்வரும் 30 தினங்களுக்குள் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்து கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும் என்பதை அறியவும்.

வருவாய் கோட்டாட்சியர்
திண்டுக்கல்.

---

வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் திண்டுக்கல்.
ந. க. எண்.7152/2025/ஆ6
பி.ப. வ.எண்.106/2024/ஆ6
செல்வி, க/பெ. இளையராஜா ,
இந்திரா நகர், சடையம்பட்டி,
மட்டப்பாறை கிராமம் ,
நிலக்கோட்டை வட்டம் ,
திண்டுக்கல் மாவட்டம்.
..மனுதாரர்
எதிர்
வருவாய் கோட்டாச்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் திண்டுக்கல்.
....எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி நிர் மனுதாரர் மகன் மாதேஸ்குமார் கடந்த 27.03.2011ம் தேதி ஷை முகவரியில் பிறந்துவிட்டதை திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் வேண்டி மனு தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் பதிவு செய்ய மேற்படி பிறப்பு சம்பந்தமாக யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் எதிர்வரும் 30 தினங்களுக்குள் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்து கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும் என்பதை அறியவும்.

வருவாய் கோட்டாட்சியர்
திண்டுக்கல்.

### ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர்:

# புள்ளி பட்டியல் ‘ஏ’ பிரிவில் முதலிடத்தில் இந்திய அணி




**துபாய், செப். 16-**

ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி தொடரில் தற்போது வரை 6 லீக் ஆட்டங்கள் நிறைவடைந்த நிலையில் புள்ளி பட்டியலில் ஏ பிரிவில் இந்திய அணியும் பி பிரிவில் ஆப்கானிஸ்தானும் முதலிடம் பிடித்துள்ளன.

**இரு பிரிவாக...**

17-வது ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி (20 ஓவர்) ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள துபாய் மற்றும் அபுதாபியில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 8 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. அதன்படி ‘ஏ’ பிரிவில் நடப்பு சாம்பியன் இந்தியா, பாகிஸ்தான், ஓமன், ஐக்கிய அரபு அமீரக அணிகளும், ‘பி’ பிரிவில் இலங்கை, ஆப்கானிஸ்தான், வங்காளதேசம், ஹாங்காங் அணிகளும் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் இரு பிரிவிலும் டாப்-2 இடங்களை பிடிக்கும் அணிகள் சூப்பர்4 சுற்றுக்கு தகுதி பெறும்.

**புள்ளிப்பட்டியல்...**

இந்த மாதம் 9-ம் தேதி தொடங்கிய இந்த தொடரில் இதுவரை 6 லீக் ஆட்டங்கள் முடிவடைந்துள்ளது. ஒவ்வொரு அணியும் குறைந்தபட்சம் ஒரு போட்டியில் விளையாடி விட்டன. இதன் முடிவில் 2 பிரிவுகளின் புள்ளி பட்டியலிலும் அணிகளின் நிலை குறித்து தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

**ஏ பிரிவு அணிகள்:**

இந்த பிரிவில் 2 போட்டிகளில் விளையாடி 2-லும் வெற்றி பெற்ற நடப்பு சாம்பியன் இந்திய அணி முதலிடத்தில் உள்ளது. மறுபுறம் 2 போட்டிகளில் விளையாடி ஒன்றில் மட்டுமே வெற்றி பெற்றுள்ள பாகிஸ்தான் 2-வது இடத்தில் உள்ளது. கடைசி 2 இடங்களில் முறையே ஒரு போட்டியில் மட்டுமே விளையாடி அதில் தோல்வியடைந்துள்ள ஓமன் மற்றும் யுஏஇ அணிகள் உள்ளன.

**பி பிரிவு அணிகள்:**

பி பிரிவை பொறுத்தவரை தலா ஒரு போட்டியில் மட்டுமே ஆடி அதில் வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் மற்றும் இலங்கை அணிகள் முறையே ரன் ரேட் அடிப்படையில் முதல் 2 இடங்களில் உள்ளன. இதற்கடுத்து 2 போட்டிகளில் விளையாடி ஒரு வெற்றி கண்டுள்ள வங்காளதேசம் ரன்ரேட் அடிப்படையில் 3-வது இடத்தில் உள்ளது. 2 போட்டிகளில் விளையாடி 2-லும் தோல்வி கண்ட ஹாங்காங் 4-வது இடத்தில் உள்ளது.

**‘ஏ’ பிரிவு புள்ளி பட்டியல்:**

| | |
|---|---|
| 1. | இந்தியா - 4 புள்ளிகள் - +4.793. |
| 2. | பாகிஸ்தான் - 2 புள்ளிகள் - +1.649. |
| 3. | ஓமன் - 0 புள்ளி - -4.650. |
| 4. | யுஏஇ - 0 புள்ளி - -10.483. |

**‘பி’ பிரிவு புள்ளி பட்டியல்:**

| | |
|---|---|
| 1. | ஆப்கன் - 2 புள்ளிகள் - +4.700. |
| 2. | இலங்கை - 2 புள்ளிகள் - +2.595. |
| 3. | வங்காளதேசம் - 2 புள்ளிகள் - -0.650. |
| 4. | ஹாங்காங் - 0 புள்ளி - -2.889. |

# ஐ.சி.சி.-யின் ஆகஸ்ட் மாத சிறந்த வீரராக சிராஜ் தேர்வு





**துபாய், செப். 16-**

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் ஆகஸ்ட் மாத சிறந்த வீரர் மற்றும் வீராங்கனை விருது வென்றவர்கள் விவரங்களை அறிவித்துள்ளது. அதன்படி, ஆகஸ்ட் மாத சிறந்த வீரர் விருதை இந்தியாவின் முகமது சிராஜும், சிறந்த வீராங்கனை விருதை அயர்லாந்தின் ஓர்லா ப்ரெண்டர்காஸ்ட்டும் வென்றுள்ளனர்.

**3 வீரர், வீராங்கனைகள்...**

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) ஒவ்வொரு மாதமும் சிறந்த வீரர் மற்றும் வீராங்கனையை தேர்வு செய்து கவுரவித்து வருகிறது. அதன்படி, கடந்த ஆகஸ்ட் மாத சிறந்த வீரர் மற்றும் வீராங்கனையை தேர்வு செய்ய தலா 3 வீரர் மற்றும் வீராங்கனைகள் கொண்ட பரிந்துரை பெயர் பட்டியலை ஐ.சி.சி. அறிவித்திருந்தது.

**சிராஜ் - மேட் ஹென்றி...**

இதில் ஆகஸ்ட் மாத சிறந்த வீரர் விருதுக்கான பரிந்துரை பெயர் பட்டியலில் 3 வேகப்பந்து வீச்சாளர்கள் இடம்பெற்றிருந்தனர். அதன்படி இந்தியாவின் முகமது சிராஜ், வெஸ்ட் இண்டீசின் ஜெய்டன் சீல்ஸ் மற்றும் நியூசிலாந்தின் மேட் ஹென்றி ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இதேபோல் சிறந்த வீராங்கனைக்கான பரிந்துரை பெயர் பட்டியலில் அயர்லாந்தின் ஓர்லா ப்ரெண்டர்காஸ்ட், நெதர்லாந்தின் ஐரிஸ் ஸ்வில்லிங் மற்றும் பாகிஸ்தானின் முனீபா அலி ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

**ப்ரெண்டர்காஸ்ட்டும்...**

இந்நிலையில், சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் ஆகஸ்ட் மாத சிறந்த வீரர் மற்றும் வீராங்கனை விருது வென்றவர்கள் விவரங்களை அறிவித்துள்ளது. அதன்படி, ஆகஸ்ட் மாத சிறந்த வீரர் விருதை இந்தியாவின் முகமது சிராஜும், சிறந்த வீராங்கனை விருதை அயர்லாந்தின் ஓர்லா ப்ரெண்டர்காஸ்ட்டும் வென்றுள்ளனர்.

## இந்திய வீராங்கனைக்கு தங்கம்



உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டி இங்கிலாந்தின் லிவர்பூல் நகரில் கடந்த 10 நாட்களாக நடந்து வந்தது. இதில் நடந்த 48 கிலோ எடைப்பிரிவின் இறுதி ஆட்டத்தில் இந்திய வீராங்கனை மீனாட்சி ஹூடா, ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்றவரான கஜகஸ்தானின் நாசிம் கிஜாய்பேவுடன் மோதினார்.

இதில் 4-1 என்ற கணக்கில் மீனாட்சி வெற்றிப் பெற்று தங்க பதக்கம் வென்று அசத்தினார். இந்த தொடரில் இந்திய தரப்பில் வீரர்கள் யாரும் பதக்கம் வெல்லாத நிலையில் வீராங்கனைகள் 2 தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம் என 4 பதக்கங்களை அறுவடை செய்து தேசத்துக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

## பாக். தோல்வி குறித்து அக்ரம்

இந்தியாவுக்கு எதிரான போட்டியில் இந்திய பவுலர்களுக்கு பதில் சொல்ல முடியாத பாகிஸ்தான் பேட்ஸ்மேன்கள் 63 பந்துகளில் ரன்கள் எடுக்காததே தங்களுடைய தோல்விக்கு காரணமானதாக முன்னாள் வீரர் வாசிம் அக்ரம் விமர்சித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, குல்தீப் பந்து வீசும் விதத்தை பாகிஸ்தான் பேட்ஸ்மேன்களால் கணிக்க முடியவில்லை. அது பற்றி நான் போட்டிக்கு முந்தைய நிகழ்ச்சியில் கிரேட் பேட்ஸ்மேன் கவாஸ்கரிடம் பேசினேன். அப்போது குல்தீப்பின் முன்னங்கையை படிக்காத வரை உங்களால் அவர் எம்மாதிரியான பந்துகளை வீசுகிறார் என்பதை புரிந்துகொள்ள முடியாது என கவாஸ்கர் தெரிவித்தார். அவர் சொன்னதே நடந்தது.

குல்தீப்புக்கு எதிராக ஒவ்வொரு 2வது பந்திலும் பாகிஸ்தான் பேட்ஸ்மேன்கள் ஸ்வீப் அடித்தார்கள். அப்படியானால் நீங்கள் அவருக்கு எதிராக எதையுமே படிக்கவில்லை என்று அர்த்தம். பாகிஸ்தான் தங்களுடைய ஆட்டத்தில் 63 டாட் பந்துகளை விளையாடியது. அப்படியானால் 10 ஓவருக்கு மேல் அவர்கள் டாட் பந்துகளை மட்டுமே எதிர்கொண்டுள்ளனர். அந்தளவுக்கு சிறப்பாக பந்து வீசிய இந்திய பவுலர்களுக்கு பாராட்டுக்கள். ஹசன் நவாஸ், உங்களுடைய கேப்டன் ஹாரிஸ் ஆகிய அனைவருமே திறமையான வீரர்கள். ஆனால் நீங்கள் சூழ்நிலையைப் படித்து உங்களுடைய பவுலரை தேர்ந்தெடுத்து விளையாட வேண்டும். ஆனால் அவர்கள் அனைவருமே 150 ஸ்ட்ரைக் ரேட்டில் அதிரடியாக மட்டுமே விளையாட முயற்சித்தனர். இவ்வாறு அவர் கூறினார்.

## ஆசிய கிரிக்கெட் கவுன்சில் எதிர்ப்பு

இந்திய அணியின் செயலுக்கு ஆசிய கிரிக்கெட் கவுன்சில் தலைவர் மொஷின் நக்வி கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இது குறித்து மொஷின் நக்வி தனது எக்ஸ் பக்கத்தில், “இன்றைய போட்டியில் (அதாவது நேற்று முன்தினம் ) விளையாட்டு அறம் இல்லாமல் போனது மிகவும் ஏமாற்றத்துக்குரியது. விளையாட்டில் அரசியலை கொண்டு வருவது, போட்டியின் உணர்வுக்கு நேர் எதிரானது. இனி வரும் காலங்களில் வெற்றிகள் அனைத்து அணிகளாலும் கண்ணியத்துடன் கொண்டாடப்படும் என்று நம்புவோம்” என பதிவிட்டுள்ளார்.

## இந்தியாவுக்கு எதிராக பாக்., புகார்

கிரிக்கெட் போட்டி முடிந்ததும் இரு அணி வீரர்களும் கைகுலுக்குவது வழக்கம். ஆனால் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டம் முடிந்ததும், இந்திய வீரர்கள் பாகிஸ்தான் வீரர்களுடன் கை குலுக்குவதை தவிர்த்துவிட்டனர். இது கிரிக்கெட் உலகில் பேசு பொருளாகி உள்ளது. இந்திய அணியின் இந்த செயலுக்கு ஆசிய கிரிக்கெட் கவுன்சில் தலைவர் மொஷின் நக்வி கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இந்தியாவின் அந்த செயலுக்கு எதிராக ஐ.சி.சி-யிடம் பாகிஸ்தான் புகார் செய்துள்ளது. இது பற்றி போட்டியின் நடுவர் ஆண்டி பைகிராப்ட் அவர்களிடம் பாகிஸ்தான் கொடுத்துள்ள புகாரில், அவர்களுடைய செயல் விளையாட்டின் உணர்வுக்கு எதிரானது. அவர்களுடைய செயலுக்கு பதிலடி கொடுக்கும் நோக்கத்திலேயே எங்கள் கேப்டன் சல்மான் பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்தார் என்று அறிக்கையாக வெளியிட்டுள்ளது.

## வெற்றி குறித்து சூர்யகுமார் யாதவ்



பாகிஸ்தானுக்கு எதிரான வெற்றி குறித்து பரிசளிப்பு விழாவில் பேசிய இந்திய அணி கேப்டன் சூர்யகுமார் யாதவ், “ இந்த வெற்றியைப் பரிசாகக் கருதுகிறேன். நமது ஆயுதப் படைகளுக்கு அர்ப்பணிக்கிறோம். வெற்றி பெற வேண்டும் என்று நினைத்தோம், அதைப் பெற முடிந்தது. நான் எப்போதும் செய்ய வேண்டும் என்று நினைத்த ஒரு விஷயம் என்னவென்றால் இறுதி வரை களத்தில் நின்று பேட் செய்வது. இது ஒரு சரியான தருணம். பஹல்காம் பயங்கரவாத தாக்குதலில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நாங்கள் உறுதுணையாக இருக்கிறோம்” என்றார்.

### 1,231 கிராம சுகாதார செவிலியர்களுக்கு

# செப். 22-ல் பணிநியமன ஆணைகளை வழங்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

**சென்னை, செப். 16-**

1,231 கிராம சுகாதார செவிலியர்களுக்கு பணிநியமன ஆணையை 22ம் தேதி முதல்வர் வழங்குகிறார் என மா. சுப்பிரணியன் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:- மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (15.09.2025) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில், பொது சுகாதாரத்துறையில் ஆய்வக நுட்புநர் பணியிடத்திற்கும், உணவு பகுப்பாய்வு கூடங்களில் முதுநிலை பகுப்பாய்வாளர் பணியிடத்திற்கும், ஆய்வக தொழில்நுட்புநர் பணியிடத்திற்கும் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணையினை வழங்கினார். பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

மக்கள் நல்வாழ்வுத்துறையில் காலிப்பணியிடங்கள் நிரப்புவது என்பது தொடர்ந்து மருத்துவ பணியாளர் தேர்வாணையம் மூலமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. அந்தவகையில் கடந்த மாதம் 644 பணியிடங்களுக்கு பணி ஆணைகள் தரப்பட்டது. கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்னாள் மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்ட ஆய்வக தொழில் நுட்புநர்கள் 42 பேருக்கு பணிவரன்முறை ஆணைகள் வழங்கப்பட்டது.

ஒப்பந்த அடிப்படையிலான பணிகளை நிரந்தரப் பணிகளாக மாற்றப்பட்டு பணியமர்த்தும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதேபோல் தமிழ்நாடு உணவு பாதுகாப்பு துறையில் முதுநிலை பகுப்பாய்வாளர் பணியிடம் 15 காலிப்பணியிடங்களாக இருந்தது, அதற்காக மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் சார்பாக விண்ணப்பம் பெறப்பட்டு தேர்வு நடத்தி அதில் 15 பேர் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கும் (நேற்று) பணிஆணைகள் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு முதல்வரால் தமிழ்நாட்டில் புதிதாக தொடங்கப்பட்ட 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்களுக்கு மாவட்ட சுகாதார நலவாழ்வு சங்கம் 2832 பேருக்கு பணி ஆணைகள் தரப்பட்டது. புதிதாக தமிழ்நாட்டில் 50 ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறந்து வைத்தார்கள். அதற்கு மட்டுமே மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதார ஆய்வாளர்கள், மருத்துவ உதவியாளர்கள் என்று 506 பேர் பணி நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆக மொத்தம் 33,987 பேருக்கு பணி நியமன ஆணைகள் இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு வழங்கப்பட்டிருக்கிறது.

2250 கிராம சுகாதார செவிலியர்களில் அரசு துணை செவிலியர் பயிற்சி பள்ளியில் பயின்றவர்களுக்கு பணி ஆணைகள் தரலாம் என்கின்ற வகையில் உச்சநீதிமன்றத்தில் ஒரு தீர்ப்பு வந்தது. ஆக இந்த 2250 பேரில் 1,231 பேருக்கு பணி ஆணைகள் தருவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இவர்களுக்கு கலந்தாய்வு நடத்தப்பட்டு அவரவர் விரும்பும் இடங்களிலேயே பணி ஆணைகள் தரப்பட உள்ளது. வருகின்ற 22.09.2025 காலை 10 மணிக்கு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், சென்னை கலைவாணர் அரங்கில் 1,231 கிராம சுகாதார செவிலியர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்க உள்ளார்கள். மீதமுள்ள கிராம சுகாதார செவிலியர்களுக்கான பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# இந்தியா-பாகிஸ்தான் போட்டியை ரத்து செய்ய மறியல்: 37 பேர் கைது

**கோவை, செப். 16-**

இந்தியா - பாகிஸ்தான் 20 ஓவர் கிரிக்கெட் போட்டியை ரத்து செய்யகோரி கோவையில் ரெயில் மறியலில் ஈடுபட்ட 37 பேரை பேலீசார் கைது செய்தனர்.

ஆசிய கோப்பை 20 ஓவர் கிரிக்கெட் போட்டி ஐக்கிய அரபு எமிரேட்சில் நடந்து வருகிறது. இதில் நேற்று முன்தினம் இரவு இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதின. இந்த போட்டியை ரத்து செய்ய வலியுறுத்தி கோவை ரெயில் நிலையத்தில் மறியல் போராட்டம் நடத்தப்படும் என்று சிவசேனா கட்சி சார்பில் அறிவிக்கப்பட்டது.

இதனால் நேற்று முன்தினம் காலை கோவை ரெயில் நிலையம் முன்பு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது. போராட்டக்காரர்கள் அத்துமீறி ரெயில் நிலையத்துக்குள் செல்வதை தடுக்க இரும்புத்தடுப்புகள் வைத்து அடைப்பு ஏற்படுத்தி இருந்தனர். கோவை ரெயில் நிலையம் முன்பு சிவசேனா கட்சியினர் மாநில செயலாளர் முருகன் தலைமையில் கொடியை பிடித்தபடி ஊர்வலமாக வந்தனர். அவர்கள் ரெயில் நிலையம் முன்பு வந்து இந்தியா-பாகிஸ்தான் போட்டியை ரத்து செய்யக்கோரி கோஷம் எழுப்பினர். பிறகு அவர்கள் திடீரென்று மறியலில் ஈடுபட ரெயில் நிலையத்துக்குள் நுழைய முயன்றனர்.

இதை தொடர்ந்து ரெயில் மறியலுக்கு முயன்ற சிவசேனா கட்சியை சேர்ந்த 37 பேரை போலீசார் கைது செய்தனர். இது குறித்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறும்போது, பஹல்காம் தாக்குதலில் அப்பாவி மக்கள் கொல்லப் பட்டனர். எனவே பாகிஸ்தானை பயங்கரவாத நாடாக அறிவிக்க வேண்டும் என்றனர்.

### காவல்துறை நிபந்தனைகள் மீறல்:

# திருச்சி த.வெ.க. நிர்வாகிகள் 5 பேர் மீது வழக்குப்பதிவு

**திருச்சி, செப். 16-**

திருச்சியில் த.வெ.க. தலைவர் விஜய் பிரச்சாரம் மேற்கொண்டபோது, நிபந்தனைகளை மீறியதாக திருச்சி த.வெ.க. நிர்வாகிகள் 5 பேர் மீது 3 காவல் நிலையங்களில் போலீஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

த.வெ.க. தலைவர் விஜய் திருச்சி மரக்கடை எம்ஜிஆர் சிலை அருகில் கடந்த 3 தினங்களுக்கு முன்பு பிரச்சாரத்தை தொடங்கினார். இதற்காக திருச்சி மாநகர போலீஸார் 23 நிபந்தனைகளை விதித்து, பிரச்சாரத்துக்கு அனுமதி அளித்திருந்தனர். ஆனால், போலீஸாரின் நிபந்தனைகளை த.வெ.க. நிர்வாகிகள், கட்சித் தொண்டர்கள், ரசிகர்கள் பின்பற்றவில்லை. மேலும், தனியார், அரசு பொது சொத்துகளை சேதப்படுத்தி இருந்தனர்.

இதையடுத்து, திருச்சி த.வெ.க. தெற்கு மாவட்ட தலைவர் கரிகாலன், மாநில வழக்கறிஞர் பிரிவு நிர்வாகி ஆதித்ய சோழன், தெற்கு மாவட்ட வழக்கறிஞர் பிரிவு நிர்வாகி இமய தமிழன், வழக்கறிஞர் பிரிவு மாவட்டச் செயலாளர் விக்னேஷ்குமார், மகளிர் அணி மாவட்டத் தலைவர் துளசிமணி மற்றும் சிலர் மீது பொது சொத்துகளை சேதப்படுத்தியதாக திருச்சி கன்டோன்மென்ட் காவல் நிலையத்தில் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### ஆசிய கோப்பை கிரிக்கெட் 6-வது லீக்:

# பாகிஸ்தானை வீழ்த்தியது இந்தியா

**துபாய், செப். 16-**

ஆசிய கோப்பை 6-வது லீக் போட்டியில் இந்திய அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது.

**முதலில் பேட்டிங்...**

17-வது ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி (20 ஓவர்) ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள துபாய் மற்றும் அபுதாபியில் நடந்து வருகிறது. இந்த தொடரின் 6-வது நாளான நேற்று துபாயில் நடந்த 6-வது லீக் ஆட்டத்தில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் ஆடின. இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற பாகிஸ்தான் முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்தது. தொடர்ந்து பாகிஸ்தானின் தொடக்க வீரர்களாக சாஹிப்சாதா பர்ஹான் மற்றும் சைம் அயூப் ஆகியோர் களம் இறங்கினர். இதில் சாஹிப்சாதா பர்ஹான் ஒருபுறம் நிலைத்து நின்று ஆட மறுபுறம் விக்கெட்டுகள் விழுந்த வண்ணம் இருந்தன.

**128 ரன்கள் இலக்கு...**

இதில் முகமது ஹாரிஸ் 3 ரன், பக்கார் ஜமான் 17 ரன், சல்மான் ஆகா 3 ரன், ஹசன் நவாஸ் 5 ரன் எடுத்து அவுட் ஆகினர். சைம் அயூப், முகமது நவாஸ் இருவரும் ரன் எடுக்காமல் அவுட் ஆகினர். மறுபுறம் நிலைத்து நின்று ஆடிய சாஹிப்சாதா பர்ஹான் 40 ரன்களில் அவுட் ஆனார். இறுதியில் பாகிஸ்தான் அணி 20 ஓவரில் 9 விக்கெட்டை இழந்து 127 ரன்கள் மட்டுமே எடுத்தது. பாகிஸ்தான் தரப்பில் அதிகபட்சமாக சாஹிப்சாதா பர்ஹான் 40 ரன்கள் எடுத்தார். இந்தியா தரப்பில் குல்தீப் யாதவ் 3 விக்கெட்டும், அக்சர் படேல், பும்ரா தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர். தொடர்ந்து 128 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி பேட்டிங் செய்தது.

**இந்தியா வெற்றி...**

தொடக்க ஆட்டக்காரர்களாக சுப்மன் கில் மற்றும் அபிஷேக் சர்மா களமிறங்கினர். கில் 10 ரன்னில் ஆட்டமிழந்தார். அபிஷேக் சர்மா அதிரடியுடன் 31 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். திலக் வர்மா நிதானமாக விளையாடி 31 ரன்கள் சேர்த்து அவுட்டானார். இறுதியில் இந்திய அணி 15.5 ஓவர்களில் இலக்கை கடந்து 7 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது. கேப்டன் சூர்யகுமார் யாதவ் 47 ரன்னுடனும், சிவம் துபே 10 ரன்னுடனும் ஆட்டமிழக்காமல் கடைசிவரை களத்தில் இருந்தனர்.

## ஹர்திக் பாண்ட்யா சாதனை

பாகிஸ்தானுக்கு எதிரான இந்த போட்டியில் முதல் பந்திலேயே பாகிஸ்தான் தொடக்க ஆட்டக்காரர் சைம் அயூப்பின் விக்கெட்டை ஹர்திக் பாண்ட்யா கைப்பற்றினார். இதன் மூலம் டி20 கிரிக்கெட்டில் ஆட்டத்தின் முதல் பந்திலேயே விக்கெட் கைப்பற்றிய 2-வது இந்திய பவுலர் என்ற மாபெரும் சாதனையை ஹர்திக் பாண்ட்யா படைத்துள்ளார். இதற்கு முன்னர் அர்ஷ்தீப்சிங், கடந்த ஆண்டு அமெரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் முதல் பந்திலேயே விக்கெட் வீழ்த்தி இருந்தார்.

## ரசிகர்கள் கொண்டாட்டம்

இந்திய அணியின் வெற்றியை நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் ரசிகர்கள் உற்சாகமாக கொண்டாடினர். ஜம்முவிலும் வெற்றிக் கொண்டாட்டம் களை கட்டியது. பாட்னா, வாரணாசி, அகமதாபாத் என பல இடங்களிலும் திரண்ட ரசிகர்கள் இந்திய அணியின் கேப்டன் சூர்யகுமார் யாதவிற்கு பிறந்தநாள் வாழ்த்து கூறியதோடு, இந்திய அணி வெற்றி பெற்றது தங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்ததாகவும் தெரிவித்தனர்.

### ராமதாசுக்கு திடீர் பின்னடைவு..?

# பா.ம.க. தலைவராக அன்புமணியை அங்கிகரித்தது தேர்தல் ஆணையம்..!

## வழக்கறிஞர் பாலு தகவல்

**சென்னை, செப். 16-**

அன்புமணி ராமதாஸ் நடத்திய பொதுக்குழுவை ஏற்று தேர்தல் ஆணையம் கடிதம் வழங்கியுள்ளதாகவும், அவரிடம் தான் கட்சியின் பெயர், சின்னம், கொடி ஆகியவை உள்ளதாகக் கூறியிருக்கிறார் பா.ம.க.வின் செய்தி தொடர்பாளரான வழக்கறிஞர் பாலு. மேலும், அன்புமணியைத் தலைவராக ஏற்றுக் கொள்பவர்கள் மட்டுமே பா.ம.க. சார்பில் போட்டியிட முடியும் எனக் கூறியிருக்கிறார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னதாக அன்புமணியைக் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து நீக்குவதாகவும், நானே தலைவராகத் தொடர்வேன் எனக் கூறி அதிர வைத்தார் ராமதாஸ். வன்னியர் சங்க மாநாட்டிலும் ராமதாஸ் பேசிய கருத்துகள் பா.ம.க.வினரை அதிர்ச்சியில் ஆழ்த்தின.

கட்சியின் எதிர்காலம் கருதி அன்புமணியைத் தலைவராக நியமனம் செய்த ராமதாஸ், அதற்குப் பிறகு தனக்கான முக்கியத்துவம் குறைவதாகவும், அன்புமணி தனித்துச் செயல்படுவதாக எண்ணி அவரை இலக்கு செய்வதாக அன்புமணி ஆதரவாளர்கள் கூறினர். தொடர்ந்து அன்புமணியின் நடைபயணம், பொதுக்குழு, மாவட்ட ஒருங்கிணைந்த பொதுக்குழு, கூட்டங்களுக்குத் தடைவிதிக்க வேண்டுமென ராமதாஸ் கோரிக்கை விடுத்தார்.

காவல்துறை, நீதிமன்றத்தை நாடியும் அதற்குப் பலனளிக்கவில்லை. இதற்கிடையே தனது தரப்பு பொதுக்குழுவைக் கூட்டிய அன்புமணி அடுத்த ஆண்டு வரை தானே தலைவராகத் தொடர்வேன் எனத் தீர்மானம் நிறைவேற்றி அதனைத் தேர்தல் ஆணையத்துக்கும் அனுப்பி வைத்திருக்கிறார். சில நாட்கள் இடைவெளிக்குப் பிறகு ராமதாஸ் பொதுக்குழுவைக் கூட்டி அது தொடர்பாகத் தீர்மானங்களை நிறைவேற்றி தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இந்த நிலையில் அன்புமணி ராமதாஸ் தான் உண்மையான பாட்டாளி மக்கள் கட்சியின் அங்கீகாரத்தை வழங்கி இருக்கிறது தேர்தல் ஆணையம். கடந்த சில தினங்களுக்கு முன்பு அன்புமணி நடத்திய பொதுக்குழு தீர்மானங்கள் தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதேபோல ராமதாஸ் தரப்பு பொதுக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளும் அனுப்பி வைக்கப்பட்டது. இதற்கிடையே அன்புமணி நடத்திய பொதுக்குழுவை தான் தேர்தல் ஆணையம் அங்கீகரித்துள்ளது.

மேலும் தி.நகர் பா.ம.க அலுவலகத்தை கட்சியின் அலுவலகமாக, தலைவராக அன்புமணியையும், பொதுச் செயலாளராக வடிவேல் ராவணனையும், பொருளாளராக திலகபாமாவையும் அங்கீகரித்துள்ளது. மேலும் கட்சியின் கொடி, சின்னம், பெயர் ஆகியவற்றையும் அன்புமணி தான் பயன்படுத்த வேண்டும் என தேர்தல் ஆணையம் கூறியுள்ளதாக பா.ம.க-வின் அதிகாரப்பூர்வ செய்தி தொடர்பாளரான வழக்கறிஞர் பாலு கூறியுள்ளார்.

# சினிமா CINI செய்திகள்

## ‘பிளாக்மெயில்’ திரைவிமர்சனம்



மருந்து கடை சப்ளையராக வேலை செய்யும் ஜி.வி. பிரகாஷ் செய்யாத குற்றத்திற்காக தன் கடை உரிமையாளருக்கு ரூ.50 லட்சம் கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறார். தொழிலதிபர் ஸ்ரீகாந்தின் மனைவி பிந்து மாதவியை மிரட்டி பணம் பறிக்க முயற்சிக்கிறார் வில்லன் லிங்கா.

இந்நிலையில், ஜி.வி.பிரகாஷின் பண தேவையை அறிந்துக் கொண்டு அவர் மூலம், தொழிலதிபர் ஸ்ரீகாந்தின் குழந்தையை கடத்த லிங்கா திட்டம் போடுகிறார். ஜி.வி.பிரகாஷ் குழந்தையை கடத்தினாரா? அவரது பணத் தேவை சந்திக்கப்பட்டதா? கடத்தலின் பின்னணியில் இருப்பவர்கள் யார் இதற்கான விடைதான் பிளாக்மெயில் படத்தின் கதை. ஜி.வி.பிரகாஷ் வழக்கம் போல கதாபாத்திரத்தை உணர்ந்து எதார்த்தமாக நடித்திருக்கிறார். நாயகி தேஜு அஸ்வினியின் நடிப்பும் பாராட்டுக்குறியது.

ஸ்ரீகாந்த், பிந்து மாதவி, லிங்கா, சாஜி, ரெடின் கிங்ஸ்லி, முத்துகுமார், ரமேஷ் திலக் உள்ளிட்ட அனைவரும் சிறப்பான நடிப்பைக் கொடுத்துள்ளனர். சாம். சி.எஸ் இசையில் பாடல்களும், பின்னணி இசையும் ஓகே.ரகம். எழுதி இயக்கியிருக்கும் மு.மாறன், குழந்தை கடத்தல் பின்னணியில் இரண்டு வெவ்வேறு பிளாக்மெயில் சம்பவங்களுக்கு திரைக்கதை அமைத்த விதம் விறுவிறுப்பாக மட்டுமின்றி யூகிக்க முடியாதபடி சிறப்பாக உள்ளது.

ஆரம்பம் முதல் முடிவு வரை படம் விறுவிறுப்பாக பயணிக்கும் அதே நேரத்தில் குழந்தை கடத்தலையே திரும்ப திரும்ப காட்டுவது போல் இருப்பதைத் தவிர்த்து இருந்தால் படம் பெரிய வெற்றி பெற்றிருக்கும்.


## ‘குமாரசம்பவம்’ திரைவிமர்சனம்



இயக்குநராக வேண்டும் என்ற என்னத்தில் பயணிக்கும் நாயகன் குமரன் தியாகராஜன் வீட்டில் திடீர் மரணம் ஒன்று நிகழ்கிறது. அது கொலையாக இருக்கலாம் என்று சந்தேகிக்கும் காவல்துறையின் சந்தேகப்பார்வை குமரன் தியாகராஜன் மீது திரும்புகிறது. குமரன் தியாகராஜன் சினிமா கனவு பலித்ததா? இலையா? என்பதை சொல்வது தான் ‘குமார சம்பவம்’. நாயகன் குமரன் தியாகராஜன் அனைத்து உணர்வுகளையும் மிகச்சரியாக வெளிப்படுத்தி நடிப்பில் அசத்தியிருக்கிறார். நாயகி பாயல் ராதாகிருஷ்ணா சிறப்பான நடிப்பை கொடுத்திருக்கிறார்.

கதையின் மையப்புள்ளியாக வரும் குமரவேல், வழக்கம் போல் தனது இயல்பான நடிப்பைக் கொடுத்திருக்கிறார். மேலும் பாலசரவணன், வினோத் முன்னா, ஜி.எம்.குமார், வினோத் சாகர், சிவா ஆனந்த் உள்ளிட்ட அனைவரும் கச்சிதமாக நடித்திருக்கிறார்கள். அச்சு ராஜாமணியின் இசையில் பாடல்கள் அனைத்தும் கேட்க்கும் படி உள்ளது. எழுதி இயக்கியிருக்கும் பாலாஜி வேணுகோபால், சந்தர்ப்பம் அமைந்தால் சாமனியனும் சரித்திரத்தில் இடம் பிடிக்கும் வகையில் செயல்படுவான் என்பதை அழகாக சொல்லியிருக்கிறார். மொத்தத்தில், ‘குமார சம்பவத்தை ஒரு முறைபார்க்கலாம்.

## ‘பாம்’ திரைவிமர்சனம்



ஒற்றுமையாக இருந்து பிரிந்த இரண்டு கிராம மக்கள் அடிக்கடி சண்டை போட்டுக் கொள்கிறார்கள். இதனால் கிராமத்தில் இருந்து வெளியேறி, வெளியூரில் வாழலாம் என்று நினைக்கிறார் நாயகன் அர்ஜூன் தாஸ், ஆனால், எந்த நிலையிலும் ஊரை விட்டு வெளியேறப் போவதில்லை என்பதில் உறுதியாக இருக்கும் காளி வெங்கட், திடீரென்று இறந்து விடுகிறார். அவரது இறப்பினால் ஊரே அதிர்ச்சியடைகிறது. அவரது உடலை ஒரு மரத்தடியில் எடுத்துச் சென்று வைக்க, இறந்தவரை சாமி என்று நம்பி, பிரிந்த ஊர் ஒன்றாக சேர்ந்து வணங்க தொடங்குகிறது. அதன் பிறகு என்ன நடக்கிறது என்பதை நகைச்சுவையாக சொல்வதே ‘பாம் படம்’. அர்ஜூன் தாஸ், தனது நடிப்பு மூலம் படத்திற்கு பலம் சேர்த்திருக்கிறார். இப்படி ஒரு கதாபாத்திரத்தில் அர்ஜூன் தாஸை பார்ப்பது புதிய அனுபவமாக இருக்கிறது. காளி வெங்கட் பிணமாக நடித்து பட்டையை கிளப்பி இருக்கிறார். நாயகி சிவாத்மிகா, சிங்கம்புலி, கிச்சா ரவி, அபிராமி, பால சரவணன், நாசர், ராட்சசன் சரவணன் என அனைவரும் சிறப்பான நடிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். டி.இமானின் இசையில் பாடல்களும், பின்னணி இசையும் படத்திற்கு பலம் சேர்த்திருக்கிறது. எழுதி இயக்கியிருக்கும் விஷால் வெங்கட், சாதியால் பிரிந்து கிடக்கும் ஊரை ஒன்று சேர்க்க போராடும் ஒருவரது வாயு காற்று எப்படி ஒன்று சேர்க்கிறது என்பதை நகைச்சுவை கலந்து சொல்லியிருக்கிறார். மொத்தத்தில், ‘பாம்’ ஒரு முறைப் பராக்கலாம்.

## ‘சக்தி திருமகன்’ திரைப்படத்தின் முன்னோட்டம் வெளியீட்டு விழா




விஜய் ஆண்டனி பிலிம் கார்ப்பரேஷன்ஸ் தயாரிப்பில் விஜய் ஆண்டனி நாயகனாக நடிக்கும் சக்தி திருமகன் படத்தின் முன்னனோட்டம் வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் ஏராளமான திரைப் பிரபலங்கள் கலந்து கொண்டனர். விழாவில், ஷோபா சந்திரசேகர் பேசுகையில், “விஜய் ஆண்டனி என் குடும்பத்தில் ஒருவர். முதன் முதலாக சுக்ரன் படத்தில் என்னுடைய கணவர் தான் இவரை அறிமுகப்படுத்தினார். அப்போது வேறு பெயரை வைத்துக் கொண்டு வந்தார். என்னுடைய கணவர் தான் விஜய் ஆண்டனி என்று பெயர் வைத்தார். அவர் ஒவ்வொரு படங்களையும் தேர்ந்தெடுத்து நடிக்கிறார் என்றார். பின்னர் விஜய் ஆண்டனி பேசுகையில், நேற்று தான் ’நான்’ படத்தில் நடித்தது போல் உள்ளது. 25 படங்கள் என்பது நான் நாயகனாக நடித்த படங்களை மட்டும் குறிப்பிடவில்லை, நான் சிறு கதாபாத்திரங்களில் நடித்த படங்களையும் சேர்த்து தான் 25 வது படம் என்று குறிப்பிட்டுள்ளோம். அருண் கதை சொல்லும் போது அவரை மலைத்து பார்த்துக் கொண்டிருந்தேன். முதல் பாதி சொல்லும் போது இப்படத்தின் பட்ஜெட் மிக அதிகம் என்று உணர்ந்தேன்.

நான் எப்போதும் மீடியம் பட்ஜெட் படங்களில் தான் நடித்து வந்துள்ளேன். ஆனால் இப்படத்தின் இரண்டாம் பாதியை கேட்டவுடன் பிரமித்துவிட்டேன். ஏனென்றால், இரண்டாம் பாதி முழுக்க முழுக்க அரசியல் களத்தில் உள்ளது. பெரிய பட்ஜெட், அரசியல் படம் என்று யோசனை வந்தாலும், இப்படத்தை நடித்தே ஆகவேண்டும் என்று முடிவு செய்து விட்டேன். 4 வருடம் எனக்காக காத்திருந்து ஒரு கதை அமைத்ததற்கு பிரபுவிற்கு நன்றி என்றார். இப்படம் விஜய் ஆண்டனியின் 25வது படம். இப்படத்தை அருண் பிரபு இயக்கியிருக்கிறார். இசையை விஜய் ஆண்டனியே அமைத்திருக்கிறார். நாயகி திருப்தி இப்படம் மூலம் கதாநாயகியாக அறிமுகமாகிறார்.


## ‘மிராய்’ திரைவிமர்சனம்



பேரரசர் அசோகர் சாகாவரம் பெறக்கூடிய ரகசியங்களை 9 புத்தகங்களில் எழுதி அதனை ஒரு இடத்தில் மறைத்து வைக்கிறார். மந்திர சக்தி படைத்த வில்லன் மனோஜ் மஞ்சு இந்த 9 புத்தகங்களை கைப்பற்ற முயற்சிக்கிறார். மிராய் என்ற அதீத சக்தி படைத்த நாயகன் தேஜா சஜ்ஜா எப்படி இதனை முறியடிக்கிறார் என்பதை பிரமாண்டமாக சொல்வதே மிராய் படம். நாயகன் தேஜா சஜ்ஜா அருமையாக நடித்து கைதட்டல் பெறுகிறார்.

வில்லனாக நடித்திருக்கும் மனோஜ் மஞ்சு, நாயகி ரித்திகா நாயக், ஸ்ரேயா சரண், ஜெயராம், ஜகபதி பாபு, கெட்டப் சீனு உள்ளிட்ட அனைவரும் கதாபாத்திரத்திற்கு ஏற்ப பொருத்தமாக நடித்திருக்கிறார்கள். கெள்ரா ஹரியின் பாடல்களும், பின்னணி இசையும் சிறப்பாக உள்ளன. கதையாசிரியர்கள் கார்த்திக் கட்டம்னேனி மற்றும் மணிபாபு கர்ணம் கூட்டணியில் படத்தை இயக்கியிருக்கும் கார்த்திக் கட்டம்னேனி, கிராபிக்ஸ் காட்சிகளுடன் மந்திர புத்தகம், மந்திர ஊர், மந்திர வித்தைகள் என படத்தை ரசிக்க வைத்திருக்கிறார். மொத்தத்தில், ‘மிராய்’ ஒரு முறை பார்க்கலாம்.

## மருத்துவ படிப்பை பாதியில் உதறிய ‘மதராசி’ பட நடிகர்



சிவகார்த்திகேயன் நடிப்பில் சமீபத்தில் வெளியான மதராசி படத்தில் துப்பாக்கியை எடுத்து சித்தார்தா சங்கரிடம் கொடுக்கும் காட்சி இருக்கும். திரையில் இந்த காட்சி வரும் போது அரங்கத்தில் பார்வையாளர்களின் கவனம் சித்தார்த்தா சங்கர் பக்கம் திரும்பும். இப்படி பல படங்களில் பல்வேறு கேரக்டர்களில் நடித்து கவனம் பெற்ற நடிகரான இவர் இப்போது பாலிவுட்டிலும் கால் பதித்து விட்டார். தனது திரையுலக பயணம் மற்றும் எதிர்கால திட்டம் குறித்து அவர் அளித்த பேட்டியில், நான் மலேசியாவில் பிறந்து வளர்ந்து மருத்துவ படிப்பு படித்துக் கொண்டிருந்தேன். சினிமா மீது கொண்ட ஆசையால் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு சென்னை வந்து வாய்ப்பு தேடினேன். விஜய் ஆண்டனி மூலமாக சைத்தான் படத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது. அதன் பிறகு சத்யா, கடாரம் கொண்டான், கொலை, நிலவுக்கு என்னடி என்மேல் கோபம் படத்திலும் நடித்தேன். தற்போது நடிகர் நாசரிடம் நடிப்பு பயிற்சி பெற்றதன் விளைவாக மதராசி படத்தில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. மேலும் இப்போது மூன்று தமிழ் படங்களில் நாயனாக நடிப்பதற்கு பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. அது குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்றார்.

### கொடைக்கானல் அருகே

## 100 அடி பள்ளத்தில் கவிழ்ந்த சுற்றுலா வேன்: 12 பேர் காயம்

**கொடைக்கானல், செப். 16-**

கொடைக்கானல் அருகே 100 அடி பள்ளத்தில் சுற்றுலா வேன் கவிழ்ந்ததில் 12 பேர் படுகாயம் அடைந்தனர்.

‘மலைகளின் இளவரசி’யான கொடைக்கானலுக்கு தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர். தமிழகம் மட்டுமின்றி வெளிமாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்தும் சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வருகின்றனர். இந்தநிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு மலேசியாவை சேர்ந்த 12 பேர், பாஸ்கரன் என்பவரது தலைமையில் தமிழ் நாட்டில் உள்ள சுற்றுலா இடங்கள், ஆன்மிக தலங்களை சுற்றி பார்ப்பதற்காக வந்தனர். நேற்று முன்தினம் காலை அவர்கள், பழனி முருகன் கோவிலில் சாமி தரிசனம் செய்தனர். அதன் பிறகு அவர்கள் கொடைக்கானல் செல்ல முடிவு செய்தனர். அதன்படி, ஒரு சுற்றுலா வேனில் பழனியில் இருந்து கொடைக்கானல் நோக்கி சென்று கொண்டிருந்தனர். வேனை சென்னையை சேர்ந்த விக்னேசுவரன் என்பவர் ஓட்டினார்.

மாலை 4 மணி அளவில் கொடைக்கானல் பேத்துப்பாறை பிரிவு அருகே வெள்ளைப்பாறை என்ற இடத்தில் சுற்றுலா வேன் மலைப்பாதையில் வந்து கொண்டிருந்தது. அப்போது திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த வேன் தறிகெட்டு ஓடியது. ஒருகட்டத்தில் சாலையோரம் இருந்த இரும்பு தடுப்புகளை உடைத்துக்கொண்டு, 100 அடி பள்ளத்தில் வேன் கவிழ்ந்தது. வேனில் வந்தவர்கள் ‘காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்’ என்று அபயகுரல் எழுப்பினர். ஒரு மரத்தின் மீது மோதி வேன் நின்றது.

இதனை பார்த்த அக்கம்பக்கத்தினர் உடனடியாக பள்ளத்தில் இறங்கி, வேனின் இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் வேனில் வந்த மலேசிய சுற்றுலா பயணிகள் 12 பேர் படுகாயம் அடைந்தனர். பின்னர் அவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக கொடைக்கானல் அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர்.



**சென்னை ராஜாஜி சாலையில் உள்ள பதிவுத்துறை அலுவலக வளாகத்தில் 2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்கான அனைத்து துணை பதிவுத்துறை தலைவர்கள், மாவட்டபதிவாளர்கள் நிர்வாகம் தணிக்கை அலுவர்கள் தனித்துணை ஆட்சியர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் அமைச்சர் மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. உடன் பதிவு செயலாளர் ஷில்பா, பதிவுத்துறை தலைவர் தினேஷ்பொன்ராஜ் மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.**

### அண்ணா பிறந்தநாளில் மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில்

## முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ தலைமையில் மாலை அணிவித்து மரியாதை

### பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாட்டம்



**மதுரை, செப் 16-**

பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. தலைமையில் மாலை அணிவித்து, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் நெல்பேட்டையில் உள்ள அவரது உருவசிலைக்கு முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜூ எம்.எல்.ஏ. தலைமையில் அ.தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினர்.

இதில் அ.தி.மு.க. நிர்வாகிகள் வில்லாபுரம் ஜெ.ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர். அண்ணாத்துரை, பா.குமார், சக்திமோகன், ஜெ.இஷிகா, எம்.எஸ்.கே.மல்லன், பரவை ராஜா, டாக்டர் வி.பி.ஆர். செல்வகுமார், கு.திரவியம், எஸ்.டி.ஜெயபாலன், ஏ.பார்த்திபன், சண்முகவள்ளி, சக்தி விநாயகர் பாண்டியன், ஜெயவேல், ஜெ.மாணிக்கம், சுகந்திஅசோக், எம்.ஜி.ராமச்சந்திரன், எம்.எஸ்.செந்தில்குமார், ஆர்.பாஸ்கரன், கே.கலைச்செல்வம், ஏ.இந்திரா, அமைப்புசாரா ஓட்டுநர் அணி திருமுருகன், வக்கீல் அசோகன், வி.கணேசன், விளாங்குடி கே.ஆர்.சித்தன், கே.வி.கே.கண்ணன், ரவிராஜ், ஏ.தங்கபாண்டி, மார்க்கெட் மார்நாடு, மருத்துவரணி அஜய், ஏ.மாயத்தேவன், முத்துமாரி ஜெயக்குமார், கிருஷ்ணமூர்த்தி, நாட்டாமை ஜெயக்குமார், எஸ்.பி.சண்முகசுந்தரம், நூர்முகமது, ஜாகிர்,பாத்திமா, கார்னர் பாஸ்கர், புதூர் அபுதாகீர், கே.கே.நகர் மணி, புதூர் நாகராஜ், அனுப்பானடி பாலகுமார், கோமதிபுரம் குமார், தினேஷ்அலெக்ஸ் சாண்டர், ராமசீனிவாசன், கோவில்நெடுஞ்செழியன், கிராஸ்ரோடு ராதாகிருஷ்ணன், வக்கீல் பாலமுருகன், சி.ஆர்.கதிரவன், 22 -வது வார்டு சேகர், போஸ்பாண்டி, பி.ஆர்.சி.திருமுருகன், முத்துமுருகன், ஸ்வீட்ஸ்டால் சுப்பையா,நாகேந்திரன், பூக்கடை அய்யப்பன், ஐ.டி. விங்க் கந்தன், சி.கேசவன், ஐஸ்ஆறுமுகம்,மானகிரி வீரணன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



**பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட ஓ.பி.எஸ். அணி சார்பில் நெல்பேட்டையில் உள்ள அவரது திருவுருவசிலைக்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் எம்.பி.யுமான ஆர்.கோபாலகிருஷ்ணன் தலைமையில் நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் ஐயப்பன் எம்.எல்.ஏ., மாவட்ட செயலாளர் கே.முருகேசன், வி.கே.எஸ்.மாரிச்சாமி, ஏ.கே.முத்திருளாண்டி, சுசீலாபாண்டி, இபி கிருஷ்ணமூர்த்தி, கருப்பு சரவணன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.**

## திருவாதவூரில் அண்ணா பிறந்த நாள் விழா: அ.ம.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை



**மேலூர், செப். 16-**

மதுரை புறநகர் மாவட்டம், மேலூர் சட்டமன்ற தொகுதி அ.ம.மு.க. சார்பில் திருவாதவூரில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் 117-வது பிறந்த நாள் விழாவையொட்டி அண்ணா அவர்களின் திருவுருவ சிலைக்கு முன்னாள் எம்எல்ஏ ஆர். சாமியின் மகன் ஆசையன் சாமி தலைமையில் அ.ம.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை செய்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மேலூர் தொகுதி பொறுப்பாளர் சோமாசி, மேலூர் நகர்கழகசெயலாளரும், நகர் மன்ற உறுப்பினர் ஆனந்த், திருவாதவூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மோகன், கொட்டாம்பட்டி ஒன்றியகழக செயலாளர்கள் செழியன், தர்மலிங்கம், அருணாச்சலம், ஜெயபால், மற்றும் மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர நிர்வாகிகள், கட்சிதொண்டர்கள் பலர் கலந்துகொண்டனர்.




● சென்னை கலைவாணர் அரங்கத்தில் நேற்று சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் "அன்புக்கரங்கள்" திட்டத்தை தொடங்கி வைத்து அன்புக்கரங்கள் மற்றும் தாயுமானவர் திட்ட பயனாளிகளுக்கு மடிக்கணினிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கீதா ஜீவன், மா.சுப்பிரமணியம், பி.கே.சேகர்பாபு ஆகியோர் கலந்து கொண்டனர்.



● பேரறிஞர் அண்ணாவின் 117-வது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று சென்னை வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே உள்ள அவரது திருவுருவச்சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த திருவுருவப்படத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், பாராளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, அமைச்சர்கள், பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### அரசியல் என்பது மக்கள் பணி, கடுமையான பணி:

# எங்களுடைய அடிப்படையே பதவி அல்ல, பொறுப்புதான்

## 'அன்புக்கரங்கள்' திட்ட தொடக்க விழாவில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, செப். 16-

அரசியல் என்பது மக்கள் பணி. அது கடுமையான பணி. அரசியல் என்றால் பலர் என்ன நினைக்கிறார்கள் என்றால், ஏதோ, ஆட்சிப் பொறுப்புக்கு வந்தோம்; பொறுப்பை மறந்து பதவி மோகத்தில் இருந்தோம்; சில கவர்ச்சித் திட்டங்களை செய்தோம்; மறுபடியும் பதவி மோகத்தோடு தேர்தலுக்கு தயாராவோம் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால், எங்களுடைய அடிப்படையே, "பதவி அல்ல; பொறுப்பு" தான். அதிகாரம் என்பது சாமானியனுக்காக போராடுவது என்று அன்பு கரங்கள் திட்டத்தை தொடங்கி வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

**கவலைப்பட வேண்டாம்**

முதல்வர் மு. க. ஸ்டாலின் சென்னை, கலைவாணர் அரங்கில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், "அன்புக்கரங்கள்" திட்டத்தை தொடங்கி வைத்து, ஆற்றிய உரையில் கூறியதாவது:-

எப்படி இருக்கிறீர்கள்? நன்றாக இருக்கிறீர்களா? உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம். இனிமேல், நீங்கள் கவலைப் பட வேண்டாம். உங்களை இன்னும் கவனித்துக் கொள்ளத்தான் இந்த அன்புக் கரங்கள் திட்டத்தைத் தொடங்கி இருக்கிறோம். நான் இருக்கிறேன்... உங்களை பத்திரமாக பார்த்துக் கொள்வேன்.

**செலுத்துகின்ற மரியாதை**

இன்றைக்கு மிகவும் முக்கியமான நாள் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் நம்முடைய தாய் நிலத்துக்கு "தமிழ்நாடு" என்று பெயர் சூட்டிய தமிழ்த்தாயின் தலைமகன் அவருடைய பிறந்த நாள். "ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்போம்" என்று திராவிட மாடல் ஆட்சிக்கு இலக்கணம் எழுதிய மாபெரும் தலைவரின் பிறந்தநாள். இன்று, (நேற்று) இந்தத் திட்டத்தை தொடங்கி வைத்து, இங்கு பேசிய குழந்தைகளின் சிரிப்பு தான் அண்ணா அவர்களுக்கு நாங்கள் செலுத்துகின்ற மரியாதை. மிகுந்த மன நிறைவையும், மகிழ்ச்சியையும் அடைந்து கொண்டிருக்கிறேன்.

**மக்களுடைய குரலாக**

திராவிட மாடல் என்றால் 'எல்லோருக்கும் எல்லாம்' என்று எளிமையாக விளக்கம் சொல்லிவிடலாம்.

ஆனால், எல்லாருக்கும் எல்லாம் கிடைப்பது உழைப்பதும், பாடுபடுவதும் எளிதானது அல்ல. இந்திய சமூகச் சூழலில், இவர்களுக்கெல்லாம் எதுவுமே தெரியாது - தெரியக் கூடாது என்று ஒடுக்கப்பட்ட சாமானிய மக்களின் எழுச்சிதான், திராவிட இயக்கம்.

அதனால்தான், மக்களோடு மக்களாக, மக்களுடைய குரலாக திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு ஒலித்துக் கொண்டிருக்கிறது.

**எப்போதும் மக்களோடு**

மக்களுடைய தேவைகளை, இந்த சமூகத்துக்கு தேவையான மாற்றங்களை, ஆட்சிப் பொறுப்பைப் பயன்படுத்தி இன்றைக்கு நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். அரசியல் என்பது மக்கள் பணி. அது கடுமையான பணி. எங்களைப் பொறுத்த வரைக்கும், இங்கே சொகுசுக்கு இடமில்லை. நீங்களே பார்த்துக் கொண்டிருப்பீர்கள். காலையில் ஒரு இடத்தில் மக்கள்கூட பேசிக் கொண்டிருப்பேன். ஈவினிங் பல நூறு கிலோ மீட்டர் கடந்து இன்னொரு ஊரில்... இன்னொரு பகுதியில் மக்கள்கூட இருப்பேன்.

இந்த உழைப்பைத்தான், தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர், எங்களுக்கு கற்றுத் கொடுத்திருக்கிறார்கள். இப்படி எப்போதும் மக்களோடு மக்களாக இருக்கின்ற காரணத்தால்தான், கடைக்கோடி மனிதருக்கும் என்ன தேவை என்று பார்த்துப் பார்த்து எங்களால் செய்ய முடிகிறது.

**அரசியல் என்றால்...**

அரசியல் என்றால் பலர் என்ன நினைக்கிறார்கள் என்றால், ஏதோ, ஆட்சிப் பொறுப்புக்கு வந்தோம்; பொறுப்பை மறந்து பதவி மோகத்தில் இருந்தோம்; சில கவர்ச்சித் திட்டங்களை செய்தோம்; மறுபடியும் பதவி மோகத்தோடு தேர்தலுக்கு தயாராவோம் என்று சிலர் நினைக்கிறார்கள்.

ஆனால், எங்களுடைய அடிப்படையே, "பதவி அல்ல; பொறுப்பு" தான். அதிகாரம் என்பது சாமானியனுக்காக போராடுவேது.

இவ்வாறு அவர் கூறினார்.



● சென்னை ராஜாஜி சாலையில் உள்ள 160 ஆண்டுகள் பழமை வாய்ந்த புராதன பதிவுத்துறை அலுவலக வளாகத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய நவீன கூட்டரங்கத்தை நேற்று வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் ஷில்பா பிரபாகர் சதீஷ், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




● மதுரை மாவட்டத்தில் லேடி டோக் பெருமாட்டி கல்லூரியில் நேற்று 112 குழந்தைகளுக்கு "அன்புகரங்கள்" அடையாள அட்டைகளை தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், மாநகராட்சி துணை மேயர் தி.நாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வக்பு திருத்த சட்டத்திற்கு தடை...(1-ம் பக்க தொடர்ச்சி)

தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:- தி.மு.க.வும் மற்ற மனுதாரர்களும் வக்பு திருத்தச் சட்டத்துக்கு எதிராகத் தொடர்ந்த வழக்கில், மத்திய பா.ஜ.க. அரசு கொண்டு வந்துள்ள முக்கியத் திருத்தங்களுக்குத் தடை விதித்து சுப்ரீம் கோர்ட் இன்று (நேற்று) உத்தரவிட்டுள்ளது.

மத்திய பா.ஜ.க. அரசு அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிராக, சட்டவிரோதமாகச் செய்துள்ள திருத்தங்களை நீக்குவதை நோக்கிய முக்கிய நகர்வாக நீதிமன்ற உத்தரவு அமைந்துள்ளது. இந்த சட்டத் திருத்த முன்வரைவு பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்தே, தி.மு.க. இதனைத் தொடர்ச்சியாக எதிர்த்து வந்துள்ளது. இதனை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள்ள பலரோடு சேர்ந்து வெற்றியும் கண்டுள்ளது. தி.மு.க. தலைமையிலான தமிழ்நாடு அரசும் மத்திய அரசு வக்பு திருத்தச் சட்டத்தைத் திரும்பப் பெறவேண்டும் என வலியுறுத்திச் சட்ட மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, ஆட்சி அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தும் பா.ஜ.க.வின் முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்தது.

இந்நிலையில், சுப்ரீம் கோர்ட்டின் உத்தரவு இஸ்லாமியர்களின் மத உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் அரசியலமைப்புச் சட்டத்தையும் சுப்ரீம் கோர்ட் பாதுகாக்கும் என மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை வலுப்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## மாதம் 2,000 ரூபாய் உதவித்தொகை...(1-ம் பக்க தொடர்ச்சி)

திராவிட மாடல் அரசு, என்ன மாதிரியான நெருக்கடியில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தது என்று உங்கள் அனைவருக்கும் நன்றாக தெரியும்.

கொரோனா பெருந் தொற்று உச்சத்தில் இருந்த காலக்கட்டம் அது. ஏராளமான உயிர்கள் பறிபோனது. பலருடைய தொழில்கள் எல்லாம் முடங்கிப் போனது. பல குடும்பங்கள் தங்களுடைய முதுகெலும்பை இழந்து, பல வீனப்பட்டது. உடனே, இந்தியாவுக்கே முன்மாதிரி அரசாக, கொரோனாவால் பெற்றோரை இழந்த 15 ஆயிரத்து 775 குழந்தைகளுக்கு, 511 கோடியே 27 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கினோம்.

இது என்ன, வாக்கு அரசியலுக்காக செய்வதா? இல்லை. கொரோனாவால் பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகளுக்கு மாதந்தோறும் மூவாயிரம் ரூபாய் என்று 2021-ல் ஆயிரத்து 148 குழந்தைகள் - 2022-ல் ஆயிரத்து 112 குழந்தைகள் - 2023-ல் ஆயிரத்து 12 குழந்தைகள் என்று, மூன்று ஆண்டுகளுக்கு நிதி உதவி வழங்கினோம். இது என்ன, வாக்கு அரசியலுக்காக செய்வதா? இல்லை. அரசு சேவை இல்லங்கள் மற்றும் அரசு குழந்தைகள் இல்லங்களில் தங்கியிருக்கின்ற ஆயிரத்து நானூறு பெண் குழந்தைகளுக்கு தற்காப்பு மற்றும் விளையாட்டுப் பயிற்சிகள் வழங்குகிறோம்.

இதென்ன, வாக்கு அரசியலுக்காக செய்வதா? இல்லை. சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்களில் இருக்கின்ற ஊட்டசத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கு தாய்ப்பால் வழங்க, அனைத்து சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்களையும், தாய்ப்பால் வங்கியுடன் இணைத்திருக்கிறோம்.

இது என்ன, வாக்கு அரசியலுக்காக செய்வதா? இல்லை. இப்படி ஏராளமான திட்டங்களை, முன்னெடுப்புகளை எங்களால் பட்டியலிட்டு சொல்லிக் கொண்டே இருக்க முடியும். இதற்கும் வாக்கு அரசியலுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது? வாக்கு என்பது, மக்களின் நம்பிக்கையை பெற்றதற்கான அடையாளம். அந்த நம்பிக்கையை பெறும், கொள்கையும், செயல்திட்டமும், உழைப்பும், எங்களிடம் இருக்கிறது.

அந்த நம்பிக்கையினால் பெறப்பட்டிருக்கும் இந்தப் பொறுப்பு, சமூகத்தின் கடைக்கோடி மனிதரையும் கை கொடுத்து மேலே தூக்கி விடுவதற்கான வாய்ப்பு. அந்தக் கையாகத்தான் என்னுடைய கை இருக்கவேண்டும் என்று நினைக்கிறேன். அப்படிதான், இருந்து கொண்டிருக்கிறது. பெற்றோர் வேலைக்கு செல்கிறார்கள் என்று, குழந்தைகளுக்கு காலை உணவு வழங்குகிறோம். பெற்றோரே இல்லாத குழந்தைகளை, சிங்கிள் பேரண்ட் இருக்கின்ற குழந்தைகளை பார்த்துக் கொள்ள வேண்டுமே என்ற எண்ணம் வந்தது. அந்த அடிப்படையில் உருவானதுதான், இந்த அன்புக்கரங்கள் திட்டம்.

இந்தத் திட்டத்திற்காக, மாவட்ட ஆட்சியர்களிடம் சொல்லி, பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகள் - பெற்றோரில் ஒருவர் இறந்து, மற்றொருவரால் கைவிடப்பட்ட குழந்தைகள் - பெற்றோரில் ஒருவர் இறந்து, மற்றொரு பெற்றோர் மாற்றுத்திறனாளியாக இருப்பவரின் குழந்தைகள் - பெற்றோரில் ஒருவர் இறந்து, மற்றொரு பெற்றோர் சிறையில் இருந்தால், அவர்களுடைய குழந்தைகள் - பெற்றோரில் ஒருவர் இறந்து, மற்றொரு பெற்றோர் உயிருக்கு ஆபத்தான நோய்களுடன் வாழ்ந்து வருகிறார்கள் என்றால், அவர்களுடைய குழந்தைகள் என்று கணக்கெடுக்கச் சொன்னோம்.

அப்படி முதல்கட்டமாக கண்டறியப்பட்ட 6,082 குழந்தைகளுக்கும், பள்ளி படிப்பை முடிக்கின்ற வரைக்கும் இனி மேல் மாதந்தோறும் இரண்டாயிரம் ரூபாய் உங்கள் வங்கி கணக்கில் வரவு வைத்திடுவோம். உங்களுக்கு 18 வயது ஆகின்ற வரைக்கும், நீங்கள் கல்வியை தொடர இந்த உதவித்தொகை வழங்கப்படும். நீங்கள் பள்ளி படிப்பை முடித்த பிறகு, கல்லூரிக் கல்வி மற்றும் உரிய திறன் மேம்பாட்டு பயிற்சிகளும் வழங்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். நீங்கள் எல்லோரும் படித்து முன்னேறி வரவேண்டும். இதுதான் என்னுடைய விருப்பம்; எங்களுடைய இலட்சியம். இந்த இலட்சியத்துக்கு துணையாகும் நம்முடைய திராவிட மாடல் அரசின் கரம்தான், அன்புக்கரம்.

நாளைக்கு நீங்கள் படித்து, டாக்டராக - என்ஜினியராக - சயிண்டிஸ் - ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரியாக - அரசியல்வாதியாக உயர்ந்து, இந்தச் சமூகத்துக்கு, இந்த மக்களுக்கு சேவையாற்ற வேண்டும். உங்களுடைய வெற்றி, தமிழ்நாட்டின் ஹிஸ்ட்டரியை சொல்ல வேண்டும். அதற்கு உங்களுக்கு சப்போர்ட்டாக, உங்கள் ஃபிரண்டாக, உங்கள் பேரண்ட்டாக, இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இருக்கிறேன்.. இருப்பேன். நன்றி. வணக்கம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# பி.எட்.,எம்.எட். மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்க கால அவகாசம் நீட்டிப்பு

## அமைச்சர் கோவி.செழியன் தகவல்

சென்னை, செப். 16-

பி.எட் ,எம்.எட். மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்க அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார். மேலும், அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வியியல் கல்லூரிகளின் பி.எட். மற்றும் எம்.எட். பாடப்பிரிவுகளுக்கான மாணவர் சேர்க்கை இணையதள விண்ணப்பப் பதிவு 30.09.2025 வரை செயல்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து உயர்கல்வித் துறை அமைச்சர் தெரிவித்துள்ளதாவது:-

முதல்வரின் ஆலோசனையின்படி 20.06.2025 அன்று சென்னை ராணி மேரி கல்லூரியில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வியியல் கல்லூரிகளின் 2025-26ஆம் ஆண்டிற்கான பி.எட். மாணவர் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்பப் பதிவு தொடங்கப்பட்டு, மாணவர் சேர்க்கை நடைபெற்றது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வியியல் கல்லூரிகளில் முதல் கட்ட கலந்தாய்விற்கு பிறகு 2 அரசு கல்வியியல் கல்லூரிகளில் 49 காலியிடங்கள் மற்றும் 13 அரசு உதவி பெறும் கல்வியியல் கல்லூரிகளில் 530 காலியிடங்கள் என மொத்தம் 579 இடங்கள் உள்ளன. இணையதளத்தில் விண்ணப்பிக்க தவறிய மாணவர்கள் காலியாக உள்ள இடங்களில் சேர்ந்து பயில ஏதுவாக இணையதள விண்ணப்பப்பதிவு வசதி நேற்று முதல் தொடர்ந்து செயல்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாய்ப்பினை பயன்படுத்தி மாணவர்கள் www.tngasa.in என்ற இணையதளத்தில் விண்ணப்பித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், மாணவர் சேர்க்கைக்கான கூடுதல் விவரங்களை www.lwiase.ac.in என்ற இணையதளத்தில் வாயிலாக தெரிந்து கொள்ளலாம். இணையதள விண்ணப்பப்பதிவு வசதி 30.09.2025 வரை செயல்படும். விண்ணப்பிக்க தவறிய மாணாக்கர்கள் www.tngasa.in என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.



● பேரறிஞர் அண்ணாவின் 117-வது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் நெல்பேட்டையில் உள்ள அவரது உருவச்சிலைக்கு முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. தலைமையில் அ.தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினர். இதில் மாவட்ட, பகுதி, வட்ட, சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.